# எரிசக்தித் துறை

## மக்கள் சாசனம்

## 2020

©

தமிழ்நாடு அரசு

**2020**

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் | 1-12 |
| 2. | தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை | 13-19 |
| 3. | மின் ஆய்வுத் துறை | 21-44 |
| 4. | தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் | 45-47 |

# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

## இலட்சிய கூற்று

மலிவான விலையில் தரமான தடையில்லா

மின்சாரம் எனில் தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனமே

எனும் இலக்கை அடைதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
144, அண்ணா சாலை
சென்னை – 600 002

# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

## 1.0 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இயக்குநர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. விக்ரம்கபூர் இ.ஆ,ப., | தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்<br>கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ் நாடு அரசு |
| 2. | திரு. ச.கிருஷ்ணன் இ.ஆ.ப., | பதவி சார் இயக்குநர்<br>கூடுதல் தலைமைச் செயலாளர்<br>நிதித் துறை/தமிழ் நாடு அரசு |
| 3. | திரு. அ. கார்த்திக் இ.ஆ.ப., | பதவி சார் இயக்குநர்<br>முதன்மைச் செயலாளர்/ எரிசக்தி துறை (கூடுதல் பொறுப்பு), தமிழ் நாடு அரசு |
| 4. | திரு. என். முருகானந்தம், இ.ஆ.ப., | பதவி சார் இயக்குநர்<br>முதன்மைச் செயலாளர்<br>தொழில் துறை/ தமிழ் நாடு அரசு |
| 5. | டாக்டர். ச.வினித் இ.ஆ.ப., | இணை நிர்வாக இயக்குநர் /<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் |
| 6. | பொறிஞர். எஸ். சண்முகம், பி.இ., | பகுதி நேர இயக்குநர்/<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் நிர்வாக இயக்குநர்/ தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் |
| 7. | பொறிஞர். ரா. எத்திராஜ். பி. இ., | இயக்குநர் / உற்பத்தி<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் |
| 8. | பொறிஞர். எம்.ஏ . ஹெலன், எம். இ., | இயக்குநர்/ பகிர்மானம்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் |
| 9. | பொறிஞர். அ. அசோக்குமார், பி. இ., | இயக்குநர்/ திட்டம்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் |
| 10. | திரு. கே.சுந்தரவதனம், பி. எஸ்.சி., ஏசிஏ., ஏசிஎஸ்., | இயக்குநர்/ நிதி/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் நிர்வாகச் செயலாளர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (கூடுதல் பொறுப்பு) |

## 2.0 தேவை

தமிழ்நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றும் ஆழ்ந்த நோக்கோடு, இந்த மக்கள் சாகனத்தை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்த மக்கள் சாகனம் நாங்கள் மக்களுக்கு ஆற்றும் பணிகளுக்கானத் தரத்தையும் தரநிலையையும் வரையறுக்கிறது.

### 3.0. சாசனத்தின் நோக்கங்கள்

- நிறுவனத்தைப் பற்றிய கண்ணோட்டத்தை மக்கள் முன்வைத்தல்
- நாங்கள் ஆற்றும் பணிகளை அறிமுகம் செய்தல்
- நாங்கள் ஆற்றும் பணிகளின் தர நிலைகளை எடுத்துக் கூறல்

### 4.0 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் – ஒரு கண்ணோட்டம்

முந்தைய சென்னை அரசாங்க மின்சாரத் துறைக்கு மாற்றாக, அத்துறையின் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிட, 1948 ஆண்டின் மின் வழங்கல் சட்டம் பிரிவு 54–ன் அடிப்படையில் 01.07.1957 அன்று தமிழ் நாடு மின்சார வாரியம் என்ற அரசு சார் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. 2003 –ஆம் ஆண்டின் மின் வழங்கல் சட்டம் பிரிவு 131–ன் அடிப்படையில், தமிழ் நாடு மின்சார வாரியம் 01.11.2010 அன்று தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் என மூன்று பிரிவுகளாக மறுசீரமைக்கப்பட்டது. தற்பொழுது மின்சார சட்டம் 2003–ன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது பகிர்மான உரிமதாரராகவும் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மின் கடத்தும் உரிமதாரராகவும் இருந்து வருகிறது.

### 4.1 மின் ஆக்கம்

இந்தியா விடுதலை பெற்ற தொடக்க நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியம் மொத்த நிறுவு திறனாக 156 மெகா வாட்டையும், மொத்த ஆண்டு மின்னாக்கம் மற்றும் கொள்முதல் செய்த ஆற்றல் அளவாக 630 மில்லியன் மின் அலகுகளையும் கொண்டு எளிய பாங்கில் மக்களுக்கானத் தனது பணியைத் தொடங்கியது. தற்போது, 01.02.2020 அன்றுள்ளபடி 16,114 மெகாவாட் வழக்கமான எரிசக்தி ஆதாரங்கள் வழியாகவும் மற்றும் 15,779 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் வழியாகவும், நிறுவு திறனளவுக்கு மாபெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 01.04.2019 முதல் 01.02.2020 வரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 94,341 மில்லியன் மின் அலகுகள் அளவுக்கு மின் ஆற்றலை உற்பத்தி மற்றும் கொள்முதல் செய்துள்ளது.

### 4.2 மின் செலுத்தமும் பகிர்வும்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 303 இலட்சம் நுகர்வோர்களுக்கு மின்சாரம் வழங்குகிறது. மின் கட்டமைப்பில் 2.41 இலட்சம் கிலோ மீட்டர் நீளச் சுற்றமைப்புகள் கொண்ட உயர்வழுத்த மின் தொடர்கள், 6.34 இலட்சம் கிலோ மீட்டர் தாழ்வழுத்த மின் தொடர்கள் 1,770 துணை மின் நிலையங்கள் மற்றும் 3.23 இலட்சம் பகிர்மான மின் மாற்றிகள் ஆகியன தற்போது இயக்கத்தில் உள்ளன. ஊரக மின் வழங்கல் பணியில் 01.02.2020 அன்று வரை 1 இலட்சம் ஊர்களும், சிற்றூர்களும் மற்றும் கிராமங்களும் மின்சார இணைப்புப் பெற்றுள்ளன. இது மட்டுமன்றி 21.40 இலட்சம் வேளாண்மை நீர் உந்து அணிகளும் **(Agricultural Pumpsets)** மின் இணைப்புப் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம், கிராமங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் அதிக அளவிலான வேளாண்மை நீர்உந்து அணிகளுக்கும் மற்றும்

வறுமைகோட்டிற்கு / பின்தங்கிய / கீழ் உள்ள சமூகத்தினர் வாழும் பகுதிகளும் மின் மயமாக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, அதிக அளவில் தொழிற்சாலைகளும் மின்மயமாக்கப்பட்டுள்ளது.

சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற நம்முடைய உறுதிப்பாடு, நமது கருவிகள் மற்றும் இயந்திர தளவாடங்களை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நமது பெருமதிப்பு மிக்க மனித வளங்களை மேம்படுத்துவதும் அடங்கும்.

**5.0 எங்கள் பணிகளின் தரநிலைகள்**

மக்களுக்கு உயர்ந்த தர நிலையில் பணிபுரிய உறுதிபூண்டு பணிபுரிந்து வருகிறோம். இந்த சாசனம் மின் நுகர்வோர்களுக்கான எங்களது பணிகளின் தர நிலைகளை வரையறுக்கிறது. இந்தத் தர நிலைகளும் எங்களது தற்போதைய உயர்நிலைச் செயல்பாடுதானே தவிர இந்தத் தரநிலை அளவுகளையும் வென்று மேலும் அதி உயர்நிலையில் மின் நுகர்வோர்களுக்குப் பணிபுரியக் காத்திருக்கிறோம் என்பதை இங்கு கூற விழைகிறோம்.

**மின் இணைப்பு வழங்கல்**
**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்டவை)**

**5.1 தாழ்வழுத்த மின் இணைப்பு**

| வகையினம் | கால அட்டவணை |
|---|---|
| அ) மின் நீட்டிப்பு மற்றும் மேம்படுத்துதல் இல்லாமல் மின்னிணைப்பு அளித்தல். | பொதுவாக 1 வாரத்திற்குள் ஆனால் 30 நாட்களுக்கு மேல் மிகாமல் |
| ஆ) மின் நீட்டிப்பு மற்றும் மேம்படுத்துதலுடன் மின் மாற்றி இல்லாமல் மின்னிணைப்பு அளித்தல் | 60 நாட்கள் |
| இ) மின் நீட்டிப்பு மற்றும் மேம்படுத்துதலுடன் மின் மாற்றி வைத்து மின்னிணைப்பு அளித்தல் | 90 நாட்கள் |

**உயர்மின்னழுத்த மின் இணைப்பு**

| வகையினம் | கால அட்டவணை | |
|---|---|---|
| | உயர் மின்அழுத்தம் | அதிக உயர் மின் அழுத்தம் |
| (அ) மின் நீட்டிப்பு மற்றும் மேம்படுத்துதலுடன் மின்னிணைப்பு அளித்தல் | 60 நாட்கள் | 150 நாட்கள் |
| (ஆ) மின் மாற்றி திறன் மிகைப்படுத்துதல் / கூடுதல் மின்மாற்றி வைத்து மின் இணைப்பு அளித்தல் | 120 நாட்கள் | 180 நாட்கள் |

| | | |
|---|---|---|
| (இ) துணை மின் நிலையம் அமைத்து மின் இணைப்பு அளித்தல் | 180 நாட்கள் | 270 நாட்கள் |

குறிப்பு: கூடுதல் மின்சுமைகள் தரவும் இக்கால அட்டவணைகள் பொருந்தும்.

விவசாயம் மற்றும் குடிசை மின் இணைப்புகளுக்கு, அவ்வப்போது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிடும் நெறிமுறைகள்படியும், தமிழக அரசு வகுக்கும் நெறிமுறைகளின்படியும் விதி முறைகள் கடைபிடிக்கப்படும்.

**மேலும் பொதுமக்களின் நலன் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.**

**(அ) . தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் ஒரு நாள் மின்னிணைப்பை செயல்படுத்தியதற்கான விளக்க உரை**

- பொதுமக்களின் நலன் கருதி தாழ்வழுத்த குடியிருப்பு மற்றும் வணிக வளாகத்திற்கு (சிறப்பு மற்றும் பன்னடுக்கு கட்டிடங்கள் அல்லாத) ஒரே நாளில் மின் இணைப்பு வழங்கும் திட்டம் 01.07.2017 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

- சாலையை தோண்டி பூமிக்கடியில் சேவை இணைப்பு புதைவடங்களை புதைக்கும் பட்சத்தில் அதிகபட்சமாக 48 மணி நேரத்தில் மின் இணைப்பு வழங்கப்படும்.

- விண்ணப்பதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் இணையதளம் மூலமாகவோ (www.tangedco.gov.in) அல்லது நேரடியாகவோ தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் உரிய பிரிவு அலுவலகங்களில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

- (விண்ணப்பதாரர்கள் தன்னுடைய சான்றுடன் கூடிய வருடி நகலுடன் (Scanned Copy) விண்ணப்பித்து பூர்த்தி செய்து பதிவு ஏற்றம் செய்யப்பட்டு (எப்படி விண்ணப்பிக்கப்படுகிறதோ அதன்படி) அதனை வழங்க வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் மின் இணைப்பு கட்டணங்களை விண்ணப்பத்தை பதிவு செய்யும்பொழுதே தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணையதள மூலமாகவோ அல்லது நேரடியாக அலுவலகத்திலோ செலுத்தலாம்.

- 02.03.2020 அன்று வரையில், **7,46,180** மின் இணைப்புகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**(ஆ). தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் தொழிற்சாலைகளுக்கான தாழ்வழுத்த மின்னிணைப்பை செயல்படுத்தியதற்கான விளக்க உரை.**

- தொழிற்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 112 கிலோ வாட்டிற்கு உள்ளடங்கிய தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு புதிய மின்னிணைப்பு / கூடுதல் மின்பளு 15 நாட்களுக்குள் வழங்கும் திட்டம் 15.07.2017 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது சிறிய நீட்டிப்பு மற்றும் பகிர்மான மின்மாற்றியின் (Distribution Transformer) திறனை மேம்படுத்துதல் உள்ளடக்கிய வகைபாடுகளுக்கும் பொருந்தும்.
- இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர்கள், விண்ணப்பத்தினை இணையதளம் மூலமாகவோ (www.tangedco.gov.in) அல்லது நேரடியாகவோ தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பிரிவு அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பதாரர்கள் மின்னிணைப்பு கட்டணங்களை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணையதள மூலமாகவோ அல்லது நேரடியாக அலுவலகத்திலோ செலுத்தலாம்.

- 02.03.2020 அன்று வரையில், **90,728** மின் இணைப்புகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**(இ). மின் நீட்டிப்பு இல்லாத தொழிற்சாலைகளுக்கான மின் இணைப்பு :**

- மேலும் , தொழிற் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு மின் நீட்டிப்பு இல்லாத புதிய மின் இணைப்பு / கூடுதல் மின்பளு ஏழு நாட்களுக்குள் வழங்கும் திட்டம் 07.08.2017 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**(ஈ). இணைய தளம் மூலமாக தாழ்வழுத்த மின் இணைப்பு பெற விண்ணப்பிக்கும் முறை:**

- இணைய தளம் மூலமாக தாழ்வழுத்த மின் இணைப்பு பெற விண்ணப்பிக்கும் முறை (விவசாயம் மற்றும் குடிசை வீடுகள் நீங்கலாக) 05.08.2016 முதல் துவக்கி வைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர்கள் இணைய தளம் மூலமாக தன்னுடைய சான்றுடன் கூடிய வருடி நகலுடன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் மின் இணைப்பு கட்டணங்களை மின் இணைப்பு வேண்டி பதிவு செய்யும் பொழுதே இணைய தளம் மூலமாக செலுத்தலாம்.

- இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு உட்பட்ட அலுவலகத்திற்கு செல்ல தேவையில்லை. மேலும் எந்த இடத்தில் இருந்தும் புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்தும் இதற்கான கட்டணத்தை எளிய முறையில் செலுத்தியும் மின் இணைப்பு பெறலாம். இத்திட்டத்தின் கீழ் 02.03.2020 வரை **36,889** மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ் நாட்டில் 01.03.2020 முதல் புதிய தாழ்வழுத்த மின்னிணைப்பு பெற (குடிசை மற்றும் விவசாயம் நீங்கலாக) இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, மாநிலம் முழுவதும் உள்ள பொது மக்கள் தாழ்வழுத்த புதிய மின்னிணைப்பு பெறுவதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் இணையதளத்தின் மூலம் (www.tangedco.gov.in)

இணையவழி விண்ணப்பத்தில் உள்ள விவரங்களை பூர்த்திசெய்து, துணை ஆவணங்களின் ஸ்கேன் (scan) செய்யப்பட்ட நகல்களை பதிவேற்றம் செய்யலாம்.

**(உ). இணைய தளம் வாயிலாக புதிய உயர்மின் அழுத்த இணைப்பு பெற விண்ணப்பிக்கும் முறை:**

- தொழிற்துறை மற்றும் தொழில் அதிபர்களை தமிழகத்தில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு, இணைய தளம் மூலமாக மட்டுமே புதிய உயர்மின் அழுத்த மின் இணைப்பு பெற விண்ணப்பிக்கும் முறை 15.07.2017 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**(ஊ). குறுஞ்செய்தி மூலம் மின் நுகர்வோர்களுக்கு தெரிவித்தல் :**

- இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கையடக்க கருவியின் மூலம் பதிவு செய்யப்படும் மின் நுகர்வுக்கான பதிவு (Meter reading) குறுஞ்செய்தி மூலமாக மின் நுகர்வோர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

**(எ). மாற்றுமுறை மூலமாக மின் கட்டணம் செலுத்தும் வசதி :**

- மின் நுகர்வுக்கான மின் கட்டணத்தை பணமாகவோ, காசோலையாகவோ, வரைவோலையாகவோ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு உட்பட்ட பண வசூல் மையங்களிலும், இணையதள வங்கி வசதி, கைபேசி வழி வங்கி , கைபேசி செயலிகள், தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரம் , பற்று அட்டை மற்றும் கடன் அட்டை வாயிலாகவும், கூட்டு நுகர்வோர்கள் வங்கி , தபால் நிலையம் , தமிழ் நாடு அரசின் மின் சேவை மையங்கள் மூலமாகவும் மின் கட்டணத்தை செலுத்தலாம்.

- இவைகளை தவிர மேலும் சில சேவைகளின் வழியே மின் கட்டணத்தை செலுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.2. தற்காலிக மின் வழங்கல்

விழாக்களுக்கு ஒளியூட்டவோ, உறைவதற்கான வீடுகளுக்கோ, அடுக்குமாடி வீடுகளுக்கோ, வணிக வளாகங்களுக்கோ, தொழிலக இருப்பிடங்களுக்கோ தேவைப்படும் கட்டுமானப் பணிகள் செய்யவோ மற்றும் பிறவற்றிற்காகவோ அத்தகைய விருப்பம் உள்ள நுகர்வோர்கள் தற்காலிக மின்னிணைப்புகள் தேவையெனக் கோரினால், அத்தகைய தற்காலிக மின்னிணைப்புகளையும் புது மின்னிணைப்பு மற்றும் கூடுதல் சுமை வழங்கக் குறிப்பிடப்பட்டுள்ள அதே கால தவணை அட்டவணையின்படி தரப்படும்.

## 5.3. மின் இணைப்பு இட மாற்றம், மின் தொடர்களின் தட மாற்றம், சாதனங்களின் இட மாற்றம்

மேற்காணும் நடவடிக்கைக்காக பின்வரும் கால அட்டவணையைப் பின்பற்றப்படும்.

| | |
|---|---|
| (1) மின் அளவி / மின்னிணைப்பு இடமாற்றம் | : 25 நாட்கள் |
| (2) தாழ்வழுத்த / உயர் அழுத்த மின் தொடர் தடமாற்றம் | : 60 நாட்கள் |
| (3) மின் மாற்றிக் கட்டமைப்பு இட மாற்றம் | : 90 நாட்கள் |

மேல்குறிப்பிட்ட பணிகளை அதற்குண்டான செலவினங்களை பெற்ற பின் செய்து முடிக்கப்படும்.

**5.4. மின் இணைப்பு பெயர் மாற்றம்**

முழுமையான விண்ணப்பத்தைப் பெற்ற ஏழு நாட்களுக்குள் மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்து முடிக்கப்படும்.

**5.5 கட்டண வீத மாற்றம்:**

மின் நுகர்வோரிடமிருந்து விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கட்டண வீத மாற்றம் செய்யப்படும்.

வேளாண்மை மின்னிணைப்புக் கட்டண வீதமில்லாத தாழ்வழுத்த மின்னிணைப்பு எதையும் எந்தவொரு நுகர்வோரும் வேளாண்மை சார்ந்த தாழ்வழுத்த மின்னிணைப்புக் கட்டண வீதத்துக்கு மாற்ற அனுமதியில்லை.

**5.6. பட்டியல் சம்மந்தப்பட்ட முறையீடுகள்**

நுகர்வோரிடமிருந்து பட்டியல் சம்மந்தப்பட்ட பிழையைப் பற்றிய எந்த முறையீடுகளையும், கட்டணம் செலுத்த வேண்டிய கெடுநாளுக்கு முன்பே பெறப்பட்டால், அடுத்தப் பட்டியலிடும் முன்பு தீர்க்கப்படும். கணக்கீட்டில் தவறு போன்ற முறையீடுகள், கட்டணம் செலுத்த வேண்டிய கெடு நாளுக்கு மூன்று நாட்கள் முன்பு பெறப்பட்டால், அந்த கெடுநாட்களுக்குள்ளேயே சரிசெய்யப்படும். எனினும் கணக்கீடு சரியில்லாமையைச் காரணமாகக் கொண்டு, நுகர்வோர், செலுத்த வேண்டிய கட்டணத்தின் எப்பகுதியையும் கட்டாமல் நிறுத்தி வைக்கக் கூடாது.

**5.7. மின்னளவி மாற்றி வைத்தல்**

முறையீடுகள் வழியாகவோ அல்லது மின்னளவி ஆய்வின் போதோ, ஒரு மின்னிணைப்பில் உள்ள மின்னளவி பழுதுற்றோ, எரிந்தோ, அளவு சரியில்லாமலோ இருப்பதாக அறிந்தால், அத்தகைய மின்னளவியை, உரிய கட்டணங்களை வசூலித்து முப்பது நாட்களுக்குள் சரியான வேறு மின்னளவி கொண்டு மாற்றி வைக்கப்படும்.

**5.8 மின்வழங்கலில் நேரும் மின் தடங்கல் / மீட்பு காலம்**

மின் தடங்கல் ஏற்படும் நிகழ்வுகளில் கீழ்க்காணும் அட்டவணைப்படி மின் வழங்கல் மீட்டுத்தரப்படும்.

| மின் தடங்கலின் காரணம் | மின் வழங்கல் மீட்பு நேரம் | | | |
|---|---|---|---|---|
| | பெரு நகரம் | நகரம்/ நகராட்சி | ஊரகம் | மலைப்பகுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| உயர் அழுத்த மின் வழங்கல் பொய்த்தல் | 1 மணி | 3 மணி | 6 மணி | 12 மணி |
| கம்பப் பெட்டியில் அல்லது மின் மாற்றிக் கட்டமைப்பில் பிழை | 2 மணி | 4 மணி | 6 மணி | 12 மணி |
| பகிர்மான மின் மாற்றிப் பிழை | 24 மணி | 48 மணி | 48 மணி | 48 மணி |
| தனி மின்னிணைப்பு பிழை | 3 மணி | 9 மணி | 12 மணி | 24 மணி |

மாநகராட்சி எல்லைக்குள் இல்லாத நகரிய மற்றும் ஊரக நுகர்வோர்களிடமிருந்து இரவு நேரங்களில் பெறப்படும் மின் தடங்கல்கள் / மின் பொய்த்தல்கள் பற்றிய முறையீடுகளைப் பொறுத்தவரையில் காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் பணிபுரிந்து மின்வழங்கல் மீட்டுத் தரப்படும்.

**6.0 திட்டமிட்ட மின்வழங்கலை நிறுத்துதல்**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது மின்பகிர்மான அமைப்பை மேம்படுத்தி, செம்மையான முறையில் உங்களுக்கு பணிபுரியவோ, புது மின்னிணைப்பு தரவோ, திட்டமிட்டே மின்சாரத்தினை நிறுத்திட உங்களுக்கு மின்தடங்கல் ஏற்படும். இப்படி திட்டமிட்டே மின்சாரத்தை நிறுத்தும் போது இத்தகவலை செய்தித்தாள் மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணைய தளம் வாயிலாகவும் முன் கூட்டியே பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படும்.

**7.0 மின்னிணைப்புகளின் மீளிணைப்பு**

மின்கட்டணம் செலுத்தாததால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் நிலையில் நீங்கள் நிலுவையுடன் நடப்பு மின்கட்டணத்தை செலுத்தியதும் உங்களது மின்னிணைப்பு மீள இணைத்து மின்சாரம் வழங்கப்படும்.

**8.0 உங்களது குறைகளைக் களையும் வழிமுறைகள்**

நாங்கள் செய்யும் பணிகளில் உங்களுக்குக் குறையோ வேறு சிக்கலோ இருந்தால் நேரடியாக வந்தோ, தொலைபேசி வழியாகவோ அல்லது கடிதம் வாயிலாகவோ உரிய பிரிவு அலுவலரிடம் அல்லது உட்கோட்ட அலுவலரிடம் முறையிடலாம். மேலும் கூடுதல் அதிகாரமுள்ள அலுவலருக்கு முறையிடவேண்டுமென நீங்கள் கருதினால், உரிய கோட்டப் பொறியாளரிடமோ அல்லது மேற்பார்வைப் பொறியாளரிடமோ அல்லது தலைமைப் பொறியாளரிடமோ முறையிடலாம். பொதுமக்கள் பணி நாட்களில் அவர்களது அலுவலகத்துக்குச் சென்று மதியம் 02.30 மணி முதல் 03.30 மணி வரையிலான பார்வை நேரத்தில் நேரடியாகவும் முறையிடலாம். நீங்கள் 144, அண்ணாசாலை, சென்னை – 600 002 என்ற முகவரியில் உள்ள தலைமையக உயர்நிலை அலுவலர்களிடம், அதாவது இயக்குநர்

(மின்பகிர்மானம்) அல்லது தலைவர், மற்றும் நிர்வாக இயக்குநர், அவர்களிடம் முறையிட்டுத் தங்களது குறைகளைக் களைந்திடலாம்.

மேற்கூறும் முறைகளில் உங்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்க உங்கள் பகிர்மான வட்டக் கோட்ட அலுவலகத்துக்கு மாதமொருமுறை மேற்பார்வைப் பொறியாளர் குறைதீர்ப்பு நாளில் வருவார். இந்தக் குறைதீர்ப்பு நாளின் தேதி முன் கூட்டியே கோட்ட அலுவலக விளம்பரப் பலகையில் அறிவிக்கப்படும். குறைதீர்ப்பு நாள் மற்றும் நேர விவரத்தினை தொலைபேசி மூலம் எங்களது அலுவலகங்களில் கேட்டும் தெரிந்து கொள்ளலாம். குறைதீர்ப்பு நாளில் கோட்ட அலுவலகத்துக்கு வந்து முறையிட்டு உங்களது குறைகளை எளிதில் களையலாம்.

அனைத்து மின் பகிர்மான வட்ட அலுவலகங்களிலும் ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் பணிபுரிகிறார். அவர் உங்களது குறைகளைக் கேட்டு அவற்றைக் களைய தக்க ஏற்பாடுகளைச் செய்வார். மேலும் சென்னை தலைமையகத்திலும் ஒரு தலைமை மக்கள் தொடர்பு அலுவலர் பணிபுரிகிறார் (தொ.பே.எண்: **044–28520902**). இவ்வலுவரை அணுகினால் இவரும் தங்களுக்கு வழிகாட்டுவார்.

மேலும், மின்நுகர்வோர் அளித்த புகாரின் பேரில், உயர் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட தீர்வில் மின் நுகர்வோருக்கு திருப்தி அடையாத நிலையில், நுகர்வோர், மின் நுகர்வோர் குறைதீர்கும் மன்றத்தை அணுகலாம்.

மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் (தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்டவை) ஒவ்வொரு மின் பகிர்மான வட்ட அலுவலுகங்களிலும் தொடங்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மின் நுகர்வோர் தங்களது குறைகளை தீர்க்க மின் நுகர்வோர் குறைத்தீர்க்கும் மன்றத்தை அணுகலாம்.

மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மின்சாரம் வழங்கியதில் ஏதாவது குறைப்பாடு அல்லது குறை இருந்தாலும், மின்சாரம் வழங்குவதில் நியாமற்ற அல்லது முறையற்ற தன்மை இருந்தாலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மின்கட்டணத்தை விட அதிக அளவில் மின் கட்டணம் வசூலிக்கப்பட்டாலும், மேலும் மின் உபகரணங்கள், அவை சார்ந்த சேவைகள் பொது வாழ்க்கைக்கு ஆபத்தான நிலையில் இருந்தாலும், அக்குறைகளை மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் எடுத்துக்கொள்ளும்.

மன்றம் வழங்கிய ஆணையால் பாதிக்கப்பட்ட நபர், அந்த ஆணையை எதிர்த்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் இயங்கும், தமிழ்நாடு மின்சார குறைதீர்ப்பாளரிடம், ஆணை வழங்கப்பட்ட முப்பது நாட்களுக்குள், மேல் முறையீடு செய்யலாம்.

மின்பகிர்மான மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் நுகர்வாளர் அமைப்புகளுடன் கருத்துப் பரிமாற்றக் கூட்டங்கள் நடத்துகின்றனர். உங்கள் வட்டாரத்துக்கானப் பொதுவான சிக்கல்கள் குறித்து அந்தக் கூட்டங்களில் நீங்கள் அறிவிக்கலாம். எடுத்துக்காட்டாக உங்கள் பகுதியில் அடிக்கடி தாழ் மின்னழுத்தம் ஏற்பட்டால் அதைப் பற்றிய தகவல் பெற்றதும் நாங்கள் உங்கள் பகுதியில் அமைந்த மின் சுற்றமைப்புகளில் எப்படிச் சுமை பரவியுள்ளது என ஆய்வு செய்து தேவைப்பட்டால் புதுத் துணைநிலையமோ/புது மின்மாற்றிக் கட்டமைப்புகளோ அமைக்க ஏற்பாடு செய்வோம். அல்லது மின்சாரம் வழங்கும் தாழ்/உயர் மின்னழுத்தத் தொடர்களில்

மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வோம். இதனால் உங்களுக்கு அடிக்கடி ஏற்படும் தாழ் மின்னழுத்தக் குறைபாடு தீர்க்கப்படும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மின்சாரம் சம்பந்தமான புகார்களை இனி வாட்ஸ் ஆப் செயலி வாயிலாக தெரிவிக்க கீழ்க்கண்ட எண்களை ஒதுக்கியுள்ளது.

| மாவட்டம் | கைபேசி எண் |
|---|---|
| சேலம் , ஈரோடு , நாமக்கல் , | 9445851912 |
| திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலுார், அரியலுார், புதுக்கோட்டை திருவாரூர், நாகப்பட்டிணம், கரூர், | 9486111912 |
| மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம் , சிவகங்கை, | 9443111912 |
| காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் | 9444371912 |
| விழுப்புரம், திருவண்ணாமலை , கடலூர், | 9445855768 |
| கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, | 9442111912 |
| சென்னை | 9445850829 |
| திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் | 8903331912 |
| வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி | 6380281341 |

மின்சாரம் சம்பந்தமான புகார்களை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணைய தளம் வாயிலாகவும் தெரிவிக்கலாம்.

கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி மின்தடை புகார் மையங்கள் 43 மின் பகிர்மான வட்டங்களில் நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மின் பயனீட்டாளர்கள் 1912 என்ற எண்ணை தொடர்பு கொண்டு தங்களின் மின்தடை புகார்களைப் பதிவு செய்யலாம்.

மேலும், 24 மணி நேர மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மையம் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சரின் முகாம் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. மக்கள் இந்த மையத்தை தொடர்பு கொள்ள 044 – 24959525 என்ற எண்ணை உபயோகிக்கலாம்.

**9.0 வருங்கால முன்னோட்டம்**

நாங்கள் தொடர்ந்து மின் வலையமைப்பில் முதலீடு செய்து எங்களது பணி முறைகளைச் செம்மைப்படுத்தக் கருதியுள்ளோம். நீங்கள் எங்களது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்.

**10. நாங்கள் உங்களுக்குச் செவ்வனே பணிபுரிய நீங்கள் எப்படி உதவலாம்?**

- மின்சாரம் விலை மதிப்பற்றது. அதை வீணாக்கவோ தவறாகப் பயன்படுத்தவோ கூடாது.
- மின் கட்டணங்களை முன்கூட்டியே செலுத்துதல் .
- உங்களது மின்னளவிக்கு ஊறு ஏற்படாமல் அதைப் பாதுகாக்கலாம்.
- மின்னளவி நின்று விட்டாலோ, எரிந்துவிட்டாலோ அல்லது அதற்கு வேறு ஊறு ஏற்பட்டாலோ உடனடியாக எங்களுக்கு அறிவிக்கலாம்.

- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அலுவலர்கள் உங்களது மின்னிணைப்பை ஆய்வு செய்ய வரும்போது அவர்களது ஆய்வுக்கு முழு ஒத்துழைப்பு தாருங்கள்.

- உங்கள் இடங்களில் உள்ள மின்காப்புத் தேய்ந்த கம்பிகளை மாற்றி விபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

- மின்தடங்கலோ மின் நிறுத்தமோ ஏற்படாதிருக்க நாங்கள் பெரிதும் முயல்கிறோம். என்றாலும் அவற்றைச் சில நேரங்களில் தவிர்க்க முடியாது. அத்தகைய நேரங்களில் சற்றுப் பொறுமையுடன் ஒத்துழையுங்கள்.

- மின்தொடர்களுக்கு நெருக்கமாக மரங்கள் மற்றும் புதர்கள் இல்லாததை உறுதி செய்யுங்கள்.

- உங்கள் மின்னளவி நுண்மையான கருவி. மிகுந்த அதிகார பூர்வமற்ற மின் சுமைகளை இணைத்து அதைப் பாழ்படச் செய்யாதிருங்கள்.

- மின்சாரம் ஆபத்தானது. மின்சார வேலை தெரியாதவர்களை கொண்டு உங்களது மின் பயன்பாட்டு சாதனங்களை பழுதுபார்க்க விடாதீர்கள்.

## தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

TEDA

TAMILNADU ENERGY DEVELOPMENT AGENCY

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை,
எண் **68**, கல்லூரி சாலை,
**5**வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
சென்னை **600 006.**

**1. மக்கள் சாசனத்தின் நோக்கங்கள்:**

- குடிமக்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு மிகவும் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும், பொறுப்புடனும் தொடர்ந்து செயலாற்றும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் திறமை மற்றும் முயற்சியை இந்த சாசனம் வெளிப்படுத்துகிறது.
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை மற்றும் அதன் இதர வணிகப் பிரிவுகளில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, தரமான சேவையினை வழங்கும் அணுகுமுறையை, இச்சாசனமானது எடுத்துக்காட்டுகிறது.
- நமது அமைப்புகள் மற்றும் செயல்பாட்டு முறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் மூலம் குடிமக்களின் நன்மதிப்பைப் பெறும் வகையில், தேவைகளைப் பூர்த்தி செய்து நமது சேவைகளில் புதிய வரையளவுகளை (Bench Mark) அடைவதே இச்சாசனத்தின் நோக்கமாகும்.

**2. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை குறித்து :**

எரிசக்தியின் பல்வேறு துறைகளின் பயனுள்ள அறிவை அளித்து, அதன் மூலம் அதிவேகமாகக் குறைந்து வரும் புதுப்பிக்கத்தக்க இயலா எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் தற்போதைய எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதின் மூலம் அதிகரித்து வரும் மாசு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (த.எ.மே.மு) 1985 ஆம் ஆண்டு அரசால் நிறுவப்பட்டது. மாநிலத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை ஊக்குவித்து மற்றும் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டை முகமை, மாநிலத்தின் முகமையாக, தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

**3. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் நோக்கங்கள் :**

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் (Non Renewable Sources of Energy) பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் அதன் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- எரிசக்தி சிக்கன நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை ஊக்குவித்தல்.

**4. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை வழங்கும் சேவைகள்:**

- மாநிலத்தில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாடுகளை ஊக்குவிப்பதற்கு, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஒரு விரிவான தகவல் மற்றும் விழிப்புணர்வை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது.
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களையும், ஊக்குவித்தல் மற்றும் இணை முயற்சியை அதிகரிக்கவும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னோடியாய் விளங்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, வடிவமைப்பு மற்றும் புதுமையான புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்கான உதவிகளை பொதுத்துறை, தனியார், பொதுத்துறை – தனியார் பங்குதாரர் மற்றும் உருவாக்கம்–சொந்தம்–இயக்கம்–பரிமாற்றம் (BOOT) ஆகிய முறைகள் மூலம் செயல்படுத்தி வருகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை நிறுவுவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், தேவைப்படும் சட்டரீதியான அனுமதிகளை, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் மற்றும் முகமைகளுடன் இணைந்து, ஒற்றைச் சாளர(Single Window) முறையில் வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் செய்து முடிக்க உதவி செய்து வருகிறது.
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வழங்கும் பல்வேறு சலுகைகள், ஊக்கத்தொகைகள், மற்றும் திட்டங்களுக்குத் தகுதியான மூலதன செலவு மானியங்களை எளிதாகவும் மற்றும் விரைவாகவும் கிடைப்பதற்கு வழி வகை செய்து வருகிறது.
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை,திட்ட மேம்பாடு, தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழி வகை செய்து வருகிறது.
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் உள்ளூர் அமைப்புகள், மாநிலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை நிறுவுவதற்குத் தேவையான நிதியுதவியைப் பெறுவதற்கான ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது.
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, நிறுவப்பட்டு வரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களின் செயல்பாட்டை, குறிப்பிட்ட கால அளவில் ஆய்வு செய்து அனுமதி மற்றும் ஒப்புதல் தேவைப்படின், அதற்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை விரிவாகத் செயல்படுத்துவதற்கு வசதியாக, மாநில அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

**5. பங்குதாரர்களின் பட்டியல்:**

- மாநில அரசுத் துறைகள்
- மத்திய அரசுத் துறைகள்
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மாநில முகமைகள்
- தொழில் துறைகள் மற்றும் சங்கங்கள்
- கல்வி நிறுவனங்கள்
- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்
- இந்திய குடிமக்கள்

6. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் மின்கட்டமைப்பில்லாத சூரிய சக்தி திட்டம் மற்றும் மின்கட்டமைப்புடன் கூடிய மேற்கூரை சூரியசக்தி திட்டங்களின் நிர்ணயிக்கப்பட்ட விலை விவரங்கள் பின் வருமாறு:

**(அ) சூரிய சக்தி நீரிறைப்பான்**

| நீரிறைப்பான் திறன் (குதிரைத்திறன்) | நீரிறைப்பான் பிரிவு | நிர்ணயிக்கப்பட்ட விலை (ரூபாய்/ குதிரைத்திறன்) |
|---|---|---|
| 0.5 குதிரைத்திறன் | நேர் / மாற்று மேற்பரப்பு | 53000 |
| | நேர் / மாற்று நீர்மூழ்கி | 68000 |
| 1 குதிரைத்திறன் | மாற்று மேற்பரப்பு | 102000 |
| | மாற்று நீர்மூழ்கி | 113000 |
| | நேர் மேற்பரப்பு | 108000 |
| | நேர் நீர்மூழ்கி | 119000 |
| 2 குதிரைத்திறன் | மாற்று மேற்பரப்பு | 65000 |
| | மாற்று நீர்மூழ்கி | 76000 |
| | நேர் மேற்பரப்பு | 73000 |
| | நேர் நீர்மூழ்கி | 86000 |
| 3 குதிரைத்திறன் | மாற்று மேற்பரப்பு / நீர்மூழ்கி | 67000 |
| | நேர் மேற்பரப்பு / நீர்மூழ்கி | 74000 |
| 5 குதிரைத்திறன் | மாற்று மேற்பரப்பு / நீர்மூழ்கி | 56000 |
| | நேர் மேற்பரப்பு / நீர்மூழ்கி | 66000 |
| 7.5 குதிரைத்திறன் | நேர்/மாற்று மேற்பரப்பு / நீர்மூழ்கி | 56000 |
| 10 குதிரைத்திறன் | நேர்/மாற்று மேற்பரப்பு / நீர்மூழ்கி | 51000 |

ஒரு அமைப்பின் நிர்ணயிக்கப்பட்ட விலையானது ஒரு குதிரை திறனுக்கு பதிலாக **0.5** குதிரைதிறன் சூரிய சக்தி நீர்இறைப்பானுக்கு உள்ளது.

**(ஆ) சூரிய சக்தி விளக்கு அமைப்புகள்**

| அமைப்பு | நிர்ணயிக்கப்பட்ட விலை (ரூபாய்/ ஒரு வாட்டிற்கு) |
|---|---|
| சூரிய சக்தி படிப்பு விளக்குகள் | **160** |
| சூரியசக்தி தெருவிளக்குகள்:<br>i. (லித்தியம்–அயன் மின்கலத்துடன் கூடியவை ) | **299** |

**(இ) தனித்து இயங்கக்கூடிய சூரிய மின் நிலையங்கள் / தொகுப்புகள்**

| திறன் (கி.வா) | மின்கல சேமிப்பு (மணி நேரம்) | நிர்ணயிக்கப்பட்ட விலை (ரூபாய்/ ஒரு வாட்டிற்கு) |
|---|---|---|
| 10 வரை | 6 | 94 |
| | 3 | 74 |
| | 1 | 62 |
| 10க்கு மேல் மற்றும் 25 வரை | 6 | 84 |
| | 3 | 66 |
| | 1 | 55 |

**(ஈ) மின் கட்டமைப்புடன் கூடிய விவசாய நீரிறைப்பான்களை சூரியமயமாக்குதல்**

| திறன் | நிர்ணயிக்கப்பட்ட விலை (ரூபாய்/ ஒரு வாட்டிற்கு) |
|---|---|
| 10 கிலோ வாட் வரை | 54 |
| 10 கிலோ வாட்டுக்கு மேல் | 48 |

**(உ) மின் கட்டமைப்புடன் கூடிய மேற்கூரை சூரிய மின் நிலையங்கள்**

| திறன் | நிர்ணயிக்கப்பட்ட விலை (ரூபாய்/ ஒரு வாட்டிற்கு) |
|---|---|
| 1 கிலோ வாட்டுக்கு மேல் மற்றும் 10 கிலோ வாட் வரை | 54 |
| 10 கிலோ வாட்டுக்கு மேல் மற்றும் 100 கிலோ வாட் வரை | 48 |
| 100 கிலோ வாட்டுக்கு மேல் மற்றும் 500 கிலோ வாட் வரை | 45 |

**(ஊ) சூரிய வெப்ப பயன்பாடுகள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிடைக்கப் பெறும் நிதியுதவி/ மானியம் |
|---|---|---|
| 1. | நேரிடை வெப்ப பயன்பாட்டிற்கு சூரிய ஒளி சேகரிப்பான் அமைப்பு (NIC/CPC) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.3600/– |
| 2. | மனித ஆற்றலால் இயங்கும் செறிவாக்கி ( Concentrator ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.2100/– |
| 3. | ஒரு அச்சில் சுழலும் ஒருமுகப்படுத்தும் செறிவாக்கி (ஷெப்ளர் வட்டுகள் உட்பட) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.4500/– |
| 4. | ஒரு அச்சில் சுழலும் ஒருமுகப்படுத்தும் செறிவாக்கி (Concentrator ) (SCMR/ETC) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.5400/– |
| 5. | இரு அச்சில் சுழலும் ஒருமுகப்படுத்தும் செறிவாக்கி (Concentrator ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.6000/– |

**2017–20 ஆம் அண்டிற்கான “நகர்புற, தொழில்துறை மற்றும் விவசாய கழிவு / எச்சங்களிலிருந்து ஆற்றல் பெறுதல்” குறித்த திட்டம்.**

| வ.எண் | திட்டத்திற்கான விளக்கம் | மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதி உதவி |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | நகர்புற கழிவு/ விவசாய கழிவு/ தொழிற்சாலை கழிவு / வழிந்தோடும் பொருட்கள் அல்லது அனைத்து கழிவுகளும் கலந்து ( காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலையின் வழிந்தோடும் பொருட்கள் நீங்கலாக | 12000 மீ $^{3}$ உயிர்வாயு / தினம் ஒன்றுக்கு ரூ.1 கோடி. |
| 2 | நகர்புற கழிவு / விவசாய கழிவு / தொழிற்சாலை கழிவு / வழிந்தோடும் பொருட்கள் அல்லது அனைத்து கழிவுகளும் கலந்தால் பெறப்படும் உயிரிவாயுவை அடிப்படையாக கொண்டு மின் உற்பத்தி செய்தல். எனினும் மேம்பாட்டாளர், ஏற்கனவே உள்ள உயிரிவாயு உற்பத்தி கலன் பிரிவில் மின் உற்பத்தி செய்ய விரும்பினால், அந்த உதவி மெகா வாட் ஒன்றிற்கு ரூ. 2 கோடி மட்டுமே | ரூ.3 கோடி / மெ.வாட்<br>உச்ச வரம்பு ரூ.10 கோடி / திட்டம் |
| 3 | நகர்புற கழிவு / விவசாய கழிவு / தொழிற்சாலை கழிவு / வழிந்தோடும் பொருட்கள் அல்லது அனைத்து கழிவுகளும் கலந்தால் பெறப்படும் உயிரிவாயுவை அடிப்படையாக கொண்டு மின் உற்பத்தி செய்தல் ( உயிரி சுருக்கப்பட்ட இயற்கை வாயு) எனினும் மேம்பாட்டாளர், ஏற்கனவே உள்ள உயிரிவாயு உற்பத்தி கலன் பிரிவில் மின் உற்பத்தி செய்ய விரும்பினால், அந்த வகைக்கு பொருந்தும் மத்திய நிதிஉதவி<br>ரூ. 3 கோடி | ரூ. 4 கோடி 4800 கிலோ கிராம் உயிரி சுருக்கப்பட்ட இயற்கை வாயு (BIO CNG) தினம் ஒன்றிற்க்கு ரூ. 4 கோடி நாள் ஒன்றிற்கு 1200 மீ$^{3}$ உயிரி வாயு,<br>உச்ச வரம்வு 10 கோடி / திட்டம் |
| 4 | உயிரி வளிமமாக்கி அடிப்படையாக கொண்ட ஆற்றல் மற்றும் வெப்பம் சார்ந்த தொழிற்சாலை பயன்பாடுகள் பரவலாக்கப்பட்ட / மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத கிராமங்களில் பயன்படுத்தும் உயிரி – வளிமமாக்கி. | **<u>மின்னியல்</u>**<br>• இரட்டை எரிபொருள் இயந்திரத்திற்கு கிலோ வாட்டிற்கு ரூ.2500.<br>• 100 சதவீதம் எரிவாயு இயந்திரத்திற்கு கிலோ வாட்டிற்கு ரூ.15,000.<br>**<u>வெப்பவியல்</u>**<br>• வெப்பவியல் பயன்பாட்டில் 300 கி.வாட்டிற்கு ரூ. 2 இலட்சம் |

**7. குறை நிவர்த்தி செய்தல்:**

சேவை முறைகளில் தரக்குறைபாடு, விநியோக சேவை வழங்குவதில் தவறுதல் ஏதேனும் இருப்பின் அதற்குரிய புகார்களை, www.teda.in என்ற தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

**8. கருத்து கள்/ ஆலோசனைகள்:**

கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை, www.teda.in என்ற தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யலாம்.

9. **தகவல் தொடர்புக்கான முகவரி:**

| **வ.எண்** | **அலுவலக முகவரி** | **தொடர்பு விபரம்** |
|---|---|---|
| **1.** | தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை,<br>எண் **68**, கல்லூரி சாலை,<br>**5**வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,<br>சென்னை **600 006.** | தொலைபேசி – **044** 2824 2800<br>தொலை நகல்– **044 2822 2971**<br>மின்னஞ்சல் – info@teda.in |

தமிழ்நாடு அரசு

# மின் ஆய்வுத் துறை

திரு.வி.க தொழிற்பேட்டை

கிண்டி, சென்னை–600 032

# மின் ஆய்வுத் துறை

**1. நிர்வாக அமைப்பு மற்றும் துறைத் தலைவர்**

| | | |
|---|---|---|
| எரிசக்தித் துறை | – | திரு. ஆ. கார்த்திக், இ.ஆ.ப.,<br>அரசு முதன்மைச் செயலர் (முகூபொ) |
| மின் ஆய்வுத் துறை | – | திரு. த. இளம்பூரணன், பி.இ.,<br>அரசு தலைமை மின் ஆய்வாளர் |

**2. மக்கள் சாசனத்தின் தேவை**

மின் ஆய்வுத் துறையின் சேவைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், அச்சேவைகளை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதை தெரிந்து கொள்வதற்கும் மின் ஆய்வுத் துறைக்கான மக்கள் சாசனம் தமிழக அரசால் வெளியிடப்படுகிறது. இந்த மக்கள் சாசனம் மின் ஆய்வுத் துறை மூலமாக மேற்கொள்ளப்படும் அரசின் பல்வேறு பணிகளை வரிசைக்கிரமமாக தெரியப்படுத்துகிறது.

**3. எங்கள் தொலைநோக்கு**

மின்சாரத்தின் பாதுகாப்பான மற்றும் திறன்மிக்க பயன்பாட்டின் பொருட்டு தமிழகத்தில் உள்ள மக்கள், தொழில் அமைப்பினர் மற்றும் ஒழுங்குமுனைவோர் ஒன்றிணைந்து ஒரு வலிமைமிக்க அர்ப்பணிப்பை ஈந்துள்ளனர். இதே அர்ப்பணிப்பு மாநிலத்தின் மின்தூக்கிகள் மற்றும் மின்இயங்கும் படிகட்டுகளின் பாதுகாப்பான பயன்பாட்டிலும் தொடர்கிறது.

மின் பாதுகாப்பினை உறுதிசெய்யும்பொருட்டு, மின்சாரம் சம்பந்தமான பணிகளை முறையான பயிற்சி மற்றும் உரிமம் பெற்ற மின் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பொதுமக்கள் மற்றும் தொழில் அமைப்பினரின் தேவையாக உள்ளது.

மாநிலத்தின் மின்சார ஒழுங்குமுறையில் தமிழ்நாடு மின் ஆய்வுத் துறை தேசிய அளவில் மதிக்கத்தக்க மற்றும் உணரத்தக்க வகையில் முன்னோடி துறையாக செயல்பட்டு வலிமையான தொடர்புகள், ஆலோசனைகள், தெளிந்த ஒழுங்குமுறைகள், அடிப்படையான ஆய்வுகள் மற்றும் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளின் மூலம் மின் பாதுகாப்பினையும் திறனையும் வெளிப்படுத்தும். இத்தகைய நடவடிக்கைகள் அவரவர் துறையில் மிகத் திறமையான, தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட ஒழுங்குமுறை குழுவால் செயல்படுத்தப்படுகிறது. மேலும் அவர்கள் அந்நடவடிக்கைகள் குறித்து விளக்கிடவும் முடிவுகள் மேற்கொள்ளவும் திறனுள்ளவர்களாக உள்ளனர்.

அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற வகையில் குறைவான செலவில் திறன் மிக்க மின் பாதுகாப்பு இக்கட்டமைப்பில் உறுதிசெய்யப்படுகிறது. இக்கட்டமைப்பு செம்மையாகவும், வெளிப்படையாகவும் அனைத்து மக்களையும் தொழில்துறையையும் சென்றடைய விழைகிறது.

**4. எங்கள் செயலமைப்பு**

அனைத்து வகை மின் வழங்குவோர் மற்றும் நுகர்வோர்களிடத்தும் மின் விபத்து ஏதும் இன்றி மின் திறனுடன் உள்ள தமிழகத்தை உருவாக்கிட மின்சார பாதுகாப்பு மற்றும் சேமிப்பு குறித்த விழிப்புணர்வை நாங்கள் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மூலம் பிரகடனப்படுத்துவோம்.

i. ஒழுங்குமுறைகள், விதிகள் மற்றும் தர நிர்ணயத்தில் குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு அம்சங்களின்படி மின்னமைப்புகளில் ஆய்வுகள், சோதனைகள் மேற்கொண்டு மின் சான்றிதழ் வழங்குதல்.

ii. விதிகள் மற்றும் பாதுகாப்பு தரச் சான்றுகளின்படி மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் அமைப்புகளை ஆய்வு செய்து, உரிமம் வழங்கி அவற்றை நிர்வகித்தல் மற்றும்

iii. மின்சார நுகர்வோர்கள், உரிமதாரர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் மின் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி திறனுக்கான தேவைகள், திட்டங்களை அளித்து அதனை மேம்படுத்தல்.

**5. மக்கள் சாசனத்தின் நோக்கங்கள்**

i. மின் ஆய்வுத் துறை என்ற அமைப்பின் கண்ணோட்டத்தை பொதுமக்களிடையே தெரிவித்தல்.

ii. ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் (இத்துறையால்) மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகளை தெரிவித்தல்.

iii. இத்துறை வழங்கும் சேவையின் தரத்தை எடுத்துரைத்தல்.

**6. மின் ஆய்வுத் துறை குறித்த கண்ணோட்டம்**

மக்கள் வசதியாக வாழ்வதற்கான அடிப்படை தேவையாக மின்சாரம் மாறியுள்ளது. 1879–ஆம் ஆண்டு மின்சாரம் குறித்த முதல் சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட, மின்சாரச் சட்டம், 1887 (சட்டம் எண். XIII/1887) சட்டமாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்ட நாளான 1.7.1887 முதல் மக்கள் மற்றும் அவர்தம் உடமைகளுக்கு மின் வழங்கல் மற்றும் பயன்பாடுகளால் ஏற்படும் ஆபத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றது. மின்சாரம் வழங்கப்படும் மற்றும் பயன்பாட்டில் உள்ள எந்த ஒரு இடத்திலும் நுழைந்து ஆய்வு மற்றும் சோதனை செய்வதற்கு மேற்கண்ட சட்டம், அந்த மாநில அரசுக்கோ அல்லது அவ்வரசால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கோ அதிகாரம் அளித்துள்ளதோடு அவ்விதிகளை மக்கள் மற்றும் அவர்களின் உடமைகளின் பாதுகாப்புக்கு உகந்ததாகவும் ஆக்குகிறது.

மின்சார சட்டம், 1887 இரத்து செய்யப்பட்டு, மின் ஆய்வாளர் பதவி மற்றும் அப்பதவிக்கான பணிகள் குறித்த அம்சங்களுடன் இந்திய மின்சார சட்டம், 1903, உருவாக்கப்பட்டது. அதையடுத்து உருவாக்கப்பட்ட மின்சாரச் சட்டம், 1910 மின் சக்தியை பாதுகாப்பாக உபயோகிப்பது குறித்து முதன்மையான கவனம் செலுத்தியது. பின்னர் உருவாக்கப்பட்ட இந்திய மின் விதிகள், 1956, மின் ஆய்வாளர்களுக்கு அவர்தம் பணியினை செவ்வனே செய்து மக்களை மின் விபத்திலிருந்து காத்திட போதுமான அதிகாரங்களையும் செயல்பாடுகளையும் வழங்கியுள்ளது. பின்னர் 10.6.2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட

மின்சாரச் சட்டம், 2003 மின் உற்பத்தி, தொடரமைப்பு, பகிர்மானம், விற்பனை, நுகர்வு, பாகுபாடற்ற கொள்கைகள் ஆகிய அனைத்திற்குமான சட்டங்களை தொகுத்துள்ளது. மின்சார சட்டம், 2003–ன் கீழான பிரிவு 53–ன்படி உருவாக்கப்பட்ட, தற்போது நடைமுறையிலுள்ள மத்திய மின்சார ஆணைய ஒழுங்குமுறைகள், 2010 மின்சார பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

சுதந்திரத்திற்கு முன்பு, அப்போதைய மாகாண அரசுகள் இந்திய மின்சார சட்டத்தை அவர்களது மாநிலங்களில் நிர்வகிக்க மின் ஆய்வாளர்களை நியமித்தன. அவ்வாறு நியமிக்கப்பட்ட மின் ஆய்வாளர்கள் தொழிற்சாலை மின்னமைப்புகளை ஆய்வு செய்தல், தனியார் உரிமதாரர்களின் லாபம் மற்றும் கட்டண வீதங்களை ஒழுங்குபடுத்தி அவர்களை கட்டுப்படுத்துதல், மீட்டர்களை தர நிர்ணயம் மற்றும் அளவுத்திருத்தம் செய்தல், மின்சார வழக்கு விவாதம் மற்றும் சர்ச்சைகளில் நடுவர்களாக செயல்படுதல் போன்ற பணிகளை பொதுவாக செய்து வந்தனர். தேவைப்படும் நேர்வில் மின்சார அமைச்சருக்கு ஆலோசனையும் வழங்கினர். மேலும், அரசு மற்றும் அரசு சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டடங்களின் மின் மயமாக்கும் அனைத்து மதிப்பீடுகளையும் கூர்ந்தாய்வு செய்தனர்.

முந்தைய மெட்ராஸ் மாகாணத்திலும் 1910–ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே அவர்களுக்கென மின் ஆய்வாளர் ஒருவரை நியமித்திருந்தனர். மின் ஆய்வாளர் பதவியில் பணிபுரிந்த திறமைமிக்க மின் பொறியாளர்களே தங்களின் அனுபவம் மூலம் நடைமுறையில் உள்ள மின் சட்டத்தில் உள்ள பாதுகாப்பு அம்சங்களையும் மற்றும் நடைமுறைக் குறியீடுகளை உருவாக்குவதில் பங்களித்தவர்கள். 1930–ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாகாண மின் ஆய்வாளர் சினிமேட்டோகிராஃப் விதிகளை உருவாக்குவதில் முக்கிய காரணமாக திகழ்ந்தனர்.

அரசின் கட்டுப்பாட்டில் தனிப்பொறுப்புடன் செயல்பட்டு வந்த மின் ஆய்வாளர் பின்னர் மின்சாரத் துறையின் தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் சிறிது காலத்திற்கு பணியாற்றினர். 1936 முதல் இந்த மின் ஆய்வாளர் பதவி ஆணையரின் தரத்திற்கு உயர்த்தப்பட்டு, மின்சாரத் துறையிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டது. தற்போதைய தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் மற்றும் கேரளா ஆகியவற்றை உள்ளடக்கிய மெட்ராஸ் மாகாணம் மற்றும் சுதந்திரத்துக்குப் பிந்தைய மெட்ராஸ் மாநிலத்தின் மின் ஆய்வுத் துறையானது தலைமைப் பொறியாளர் பதவி நிலைக்கு இணையான அரசு தலைமை மின் ஆய்வாளரை தலைவராகக் கொண்டு செயல்பட்டது. 1955–56–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மெட்ராஸ் மாகாணம் பிரிக்கப்பட்டு, 1957–ஆம் ஆண்டு ஜுலை மாதம் தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கப்பட்டதை தொடர்ந்து, மின் ஆய்வுத் துறை தற்காலிகமாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒரு பகுதியாக இயங்கி வந்தபோது, அவ்வாரியத்தின் மேற்பார்வை பொறியாளர் / தலைமைப் பொறியாளர்கள் அரசு தலைமை மின் ஆய்வாளர் பதவியினை கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்தனர். 1961–ஆம் ஆண்டு அரசு தலைமை மின் ஆய்வாளர் தலைமையின் கீழ், அரசின் நேரடி கட்டுப்பாட்டில் மின் ஆய்வுத் துறை மீண்டும் செயல்பட அரசு அறிவிப்பு செய்தது. அதனைத் தொடர்ந்து 31.7.1993 வரை மின் ஆய்வுத் துறையானது பொதுப்பணித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கியது. பின்னர் மின் ஆய்வுத்துறையானது 1.8.1993 முதல் புதிதாக உருவாக்கப்பட்ட தலைமைச் செயலக எரிசக்தித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மின் ஆய்வுத் துறை இயங்கி வருகிறது.

பல்வேறு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரி தொடர்பான சட்டங்கள் உட்பட பல்வேறு வகையான மின்சார சட்டங்களின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வது மின் ஆய்வுத் துறையின் பொறுப்பாகும். மின் ஆய்வுத் துறையின் தலைவர் அரசு தலைமை மின் ஆய்வாளர் ஆவார். முதுநிலை மின் ஆய்வாளர்கள் வட்ட அலுவலர்களாகவும், மின் ஆய்வாளர்கள் மாவட்ட அளவிலும் மின் ஆய்வுத் துறைத் தலைவருக்கு உதவியாக செயல்படுகின்றனர்.

## 4.1 மின் ஆய்வுத் துறையின் செயல்பாடுகள்

கீழ்க்கண்ட சட்டபூர்வ கடமைகள் மற்றும் நிர்வாக செயல்பாடுகள் மின் ஆய்வுத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன:–

**1)** மின்சாரச் சட்டம், **2003**–ன் கீழான பல்வேறு பிரிவுகள் மற்றும் அதன் கீழான ஒழுங்குமுறைகள் அதாவது மத்திய மின்சார ஆணைய (பாதுகாப்பு மற்றும் மின் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகள்) ஒழுங்கு முறை விதிகள், **2010**–னை கீழ்க்கண்டவாறு நடைமுறை படுத்துதல்.

அ. ஒழுங்குமுறை விதிகள் **43**–ன்கீழ் புதிய உயர் மின்னழுத்த நிறுவனங்கள், காற்றாலை அமைப்புகள், சூரிய சக்தி மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் உயர் மின்னழுத்த நிறுவனங்களுக்கான கூடுதல்/மாறுதல் மின்னமைப்புக் கருவிகளை நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்குதல்.

ஆ. ஒழுங்குமுறை விதிகள் **32**–ன்கீழ் **10** கி.வா. திறனுக்கு மேலுள்ள மின்னாக்கிகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.

இ. ஒழுங்குமுறை விதிகள் **36**–ன்கீழ் **15** மீட்டருக்கு உயரத்திற்கு மேலுள்ள அடுக்குமாடி கட்டடங்களில் நிறுவப்பட்டுள்ள மின்னமைப்புகளுக்கான வழங்குதல்.

ஈ. ஒழுங்குமுறை விதிகள் **30**–ன்கீழ் உயர் மற்றும் அதி உயர் மின்னழுத்த நுகர்வோர் மின்னமைப்புகளில் காலமுறை ஆய்வு மற்றும் சோதனைகள் செய்தல்.

உ. ஒழுங்குமுறை விதிகள் **30**–ன் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின் தொடர் அமைப்பு கழகம், சுய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றுக்கு சொந்தமான துணை மின் நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள் மற்றும் பிரிகலன் நிலையங்களின் மின்னமைப்புகளில் காலமுறை ஆய்வு மற்றும் சோதனை செய்தல்.

ஊ. மின்சாரச் சட்டம், **2003**–ன் கீழான பிரிவு **161(2)**–ன்படி மின் வழங்கல், பயன்பாடு, உற்பத்தி மற்றும் பரிமாற்றம் உள்ள இடங்களில் ஏற்பட்டமின் விபத்துகளை இத்துறைக்கு அறிக்கை செய்யும் நேர்வுகளில் அவைகள் குறித்து புலனாய்வு செய்தல்.

**2)** தமிழ்நாடு மின் நுகர்வு (அ) விற்பனை மீதான வரிச் சட்டம், 2003 மற்றும் விதிகளை செயலாக்குதல்.

**3)** தமிழ்நாடு மின்சார சார்நிறுவனங்கள் கையகப்படுத்துதல் சட்டம், 1954 மற்றும் அதன் விதிகளை செயலாக்குதல்.

**4)** தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் சட்டம் மற்றும் விதிகள், 1997–னைச் செயலாக்கதல்.

**5)** தமிழ்நாடு சினிமோட்டோகிராஃப் சட்டம், 1955–ன் கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சினிமா (ஒழுங்குமுறை) விதிகள், 1957–ன் கீழமைந்த மின்னமைப்பு மற்றும் தீத்தடுப்பு/ பாதுகாப்பு விதிகளை செயலாக்குதல்.

**6)** மாநில எரிசக்தி முகமை என்ற முறையில் எரிசக்தி சேமிப்பு சட்டம், 2001 மற்றும் அதன் விதிகளை செயலாக்குதல்.

**7)** மின்னியல் தொழில்நுட்பப் பிரிவில் இந்திய தர நிர்ணய ஆணையகத்தின் சார்பாக அரசு தலைமை மின் ஆய்வாளர் மின் தர நிர்ணயங்களையும், விவரக்குறிப்புகளையும் உருவாக்குதல்.

**8)** அரசு தலைமை மின் ஆய்வாளரின் கீழ் இயங்கிடும் NABL சான்று பெற்ற அரசு மின் தர நிர்ணய ஆய்வுக்கூடத்தில் மின்னியல் தொழில்நுட்ப பிரிவில் சோதனை மற்றும் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

**9)** தமிழ்நாடு சினிமா (ஒழுங்குமுறை) விதிகள், 1957–ன் கீழ் திரைப்படக் கருவி இயக்குபவர்களுக்கான தேர்வு குழுமத்தின் தலைவராக அரசு தலைமை மின் ஆய்வாளர் செயல்படுதல்.

**10)** எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு வழிநடத்துதல் மற்றும் கண்காணிப்பு வல்லுநர் குழுவின் உறுப்பினராக அரசு தலைமை மின் ஆய்வாளர் செயல்படுதல் அ.ஆ.எண். 76, எரிசக்தி (டி3) துறை, நாள் 04.10.2019–ன்படி இத்துறையிலிருந்து தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மாற்றப்பட்டது.

**11)** ஒருங்கிணைந்த மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு குழு குறியீட்டினை (PTCC code) செயல்படுத்தும் பொருட்டு. குழுவின் உறுப்பினராக அரசு தலைமை மின் ஆய்வாளர் செயல்படுதல்.

**12)** மின் விபத்துகளை தடுக்கும் நோக்குடன் மின் இடர்பாடுகள் மற்றும் சேதம் குறித்து ஆலோசனை வழங்கும் சென்னை மாநகர உயர் மட்டக் குழுவின் உறுப்பினராக அரசு தலைமை மின் ஆய்வாளர் செயல்படுதல்.

**13)** தமிழ்நாடு மின் உரிமம் வழங்கும் வாரியத்தின் தலைவர் அரசு தலைமை மின்ஆய்வாளர் ஆவார்.

**7. செயல்பாடுகள் தரம்:**

பொதுமக்களுக்கு மிக உயர்ந்த தரத்துடன் சேவைகள் செய்ய மின் ஆய்வுத்துறை உறுதி பூண்டுள்ளது. இந்த சாசனம் பொதுமக்களுக்கான சேவைகளின் தரத்தை மேம்படுத்திட மின் ஆய்வுத்துறையின் பல்வேறு பணிகளுக்கான தரத்தினை நிர்ணயம் செய்கிறது. நாங்கள் கீழ்க்கண்ட காலவரையறையில் எங்கள் அதிகபட்ச பதில் செயல்பாடுகளாக மற்றும் முந்தைய தர அளவுகளை விஞ்ச முயற்சிக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| (i) | உயர் மின்னழுத்த நுகர்வோர்கள் | | |
| | (a) | உத்தேசிக்கப்பட்ட மின்னமைப்புகளின் வரைபட செயற்குறிப்பின் மீதான கூராய்வு அறிக்கை | பெறப்பட்ட நாளிலிருந்து 1 திங்களுக்குள் |
| | (b) | ஒழுங்குமுறை 43–ன் கீழ் ஒப்புதல் | குறை நிவர்த்தி அறிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து 7 தினங்களுக்குள் |
| (ii) | குறைந்த மின்அழுத்த மின்னமைப்புகளின் மின்னாக்கிகள் | | |
| | (a) | ஒழுங்குமுறை 32–ன் கீழ் ஒப்புதல் | வேலை முடிவு அறிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து 7 தினங்களுக்குள் |
| (iii) | மின் தூக்கிகள்/இயங்கும் படிக்கட்டுகளுக்கான மின்அமைப்புகள் | | |
| | (a) | மின்தூக்கி நிறுவிட அனுமதி | விண்ணப்பம் பெறப்பட்ட 30 தினங்களுக்குள் |
| | (b) | உரிமம் வழங்குதல் | விண்ணப்பம் பெறப்பட்ட 15 தினங்களுக்குள் |
| (iv) | திரையரங்குகள் | | |
| | (a) | புதிய / நிரந்தர / பகுதி நிரந்தர திரையரங்குகளின் வரைபட ஒப்புதல் | விண்ணப்பம் பெறப்பட்ட 30 தினங்களில் |
| | (b) | மின் சான்று வழங்குதல் | குறை நிவர்த்தி அறிக்கை பெறப்பட்ட 10 தினங்களுக்குள் |

**8. (i) முறையீடுகளின் தீர்மான வழிமுறைகள்:-**

எங்கள் சேவைகள் குறித்து ஏதேனும் குறைகள் இருப்பின், நீங்கள் சம்பந்தப்பட்ட மின்ஆய்வாளரையோ (அ) முதுநிலை மின் ஆய்வாளரையோ (அ) அரசு தலைமை மின்ஆய்வாளரையோ சந்தித்து தீர்வு பெறலாம். தங்கள் முறையீடுகளை உயர் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்ல விரும்பினால், அதனை அடுத்த உயர் அலுவலருக்கு கொண்டு செல்லலாம் அ;லலது அவ்வலுவலரை அனைத்து திங்கட்கிழமைகளில் நேரில் சந்திக்கலாம்.

**(ii) முறையீடுகள் கண்காணிப்பு மற்றும் பரிசீலனை**

ஏழு தினங்களுக்குள் உங்களின் முறையீடுகளுக்கு நாங்கள் ஏற்பளிப்பு செய்கிறோம். மேலும், இருபது தினங்களுக்குள், முறையீடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரம் அளிக்கிறோம். நாங்கள், பெறப்பட்ட அனைத்து புகார்கள் மற்றும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பதிவேட்டினை பராமரித்து வருகிறோம். இந்த சாசனத்தின்படி நாங்கள் எங்களது செயல் தரத்தினை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் மற்றும் அதன் விபரங்களை ஆண்டு அறிக்கையில் அளிக்கிறோம்.

## 9. சேவை விநியோகம்

இத்துறை தொடர்பான சேவைகளை பயன்படுத்தும் விவரங்கள் இத்துறையின் இணையதள முகவரியான "https://www.tnei.tn.gov.in."–ல் விரிவாக உள்ளன. மின் தூக்கிகள் உரிமம் பெறுதல், மின் வரி வசூலிக்கும் பொருட்டு மின்னாக்கிகளை பதிவு செய்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை நிர்வகித்தல் போன்ற சேவைகளின் இணையதள சேவை ஏற்கனவே நடைமுறையில் உள்ளன.

| திரையரங்கம் | | |
|---|---|---|
| 1. | புதிய நிரந்தர/பகுதி நிரந்தர திரையரங்குகளின் வரைபட ஒப்புதல் ஆய்வு செய்தல் மற்றும் மின்சான்று வழங்குதல் | மின் ஆய்வாளர் |
| 2. | நகரும் திரையரங்கம் ஆய்வு செய்தல் மற்றும் மின்சான்று புதியது/புதுப்பித்தல் நடவடிக்கை | மின் ஆய்வாளர் |
| 3. | திரையரங்குகளில் கூடுதல்/கருவிமாற்றம் மற்றும் மின்சான்று புதுப்பித்தல் ஆய்வுகள் | மின் ஆய்வாளர் |
| மின் தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் | | |
| 1. | மின் தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள், நிறுவுவதற்கான அனுமதி [படிவம் பி] மற்றும் மின் தூக்கிகள் மற்றும் மின்இயங்கும் படிக்கட்டுகள் இயக்குவதற்கான உரிமம் வழங்கல் | மின் ஆய்வாளர் |
| 2. | மின் தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் இயக்குவதற்கான உரிமத்தினை புதுப்பித்தல். | மின் ஆய்வாளர் |

## 10. ஆய்வு சேவை கட்டணம்

அ) விதி 43 மற்றும் 30–ன் கீழான ஆய்வுகள்

| வ. எண் | | கருவிகள் விபரம் | விதி 43–ன் கீழான ஆய்வு கட்டண வீதம் ரூ | விதி 30–ன் கீழான ஆய்வு கட்டண வீதம் ரூ |
|---|---|---|---|---|
| 1) | அதி உயர்/உயர் மின்னழுத்த மின்மாற்றிகள் | | | |
| | 1. | 10000 கேவிஏ வரை | 5000 | 3000 |
| | 2. | 10000 கேவிஏ–க்கு மேல் | 10000 | 5000 |
| 2) | உயர்/உயர் மின்னழுத்த மின்மாற்றிகள் | | | |
| | 1. | 3000 கேவிஏ வரை | 2500 | 1500 |
| | 2. | (3000–5000) கேவிஏ வரை | 3000 | 2000 |
| | 3. | 5000 கேவிஏக்கு மேல் | 3500 | 2500 |
| 3) | உயர்/நடு மின்னழுத்த மின்மாற்றிகள் | | | |
| | 1. | 500 கேவிஏ வரை | 750 | 500 |
| | 2. | (500–1000) கேவிஏ வரை | 1000 | 750 |
| | 3. | 1000 கேவிஏக்கு மேல் | 1500 | 1000 |
| 4) | உயர் மின்னழுத்த கருவிகள் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1. | 500 கேவிஏ வரை | 750 | 500 |
| | 2. | 500 கேவிஏக்கு மேல் | 1000 | 750 |
| 5) | உயர் மின்னழுத்த மின்னாக்கிகள் | | | |
| | 1. | 5000 கேவிஏ வரை | 5000 | 3000 |
| | 2. | 5000 கேவிஏக்கு மேல் | 10000 | 5000 |
| 6) | நடு மின்னழுத்த மின்னாக்கிகள் | | | |
| | 1. | 25 கேவிஏ வரை | 500 | 250 |
| | 2. | (25–100) கேவிஏ வரை | 750 | 500 |
| | 3. | (100–500)கேவிஏ வரை | 1500 | 750 |
| | 4. | 500 கேவிஏக்கு மேல் | 2500 | 1000 |
| 7) | உயர் மின்னழுத்த சுவிட்ச் போர்டு | | | |
| | 1. | 5 பேனல்கள் வரை | 1000 | |
| | 2. | 5 பேனல்களுக்கு மேல் | 2000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8) | நடு மின்னழுத்த சுவிட்ச் போர்டு/ரைசிங் மெயின்ஸ் | | | |
| | 1. | (250–1000) ஆம்ஸ் | 500 | |
| | 2. | 1000 ஆம்ஸ்க்கு மேல் | 1000 | |
| 9) | நடு மின்னழுத்த கருவிகள் | | | |
| | 1. | 5 கேவிஏ வரைக்கும் | 60 | 50 |
| | 2. | (5–25)கேவிஏ வரை | 120 | 75 |
| | 3. | (25–50) கேவிஏ வரை | 200 | 100 |
| | 4. | (50–250) கேவிஏ வரை | 300 | 150 |
| | 5. | (250–500) கேவிஏ வரை | 500 | 250 |
| | 6. | 500 கேவிஏக்கு மேல் | 750 | 500 |
| | | அதிகபட்சம் | | 15000 |
| 10) | மற்றவை | | | |
| | 1. | எக்ஸ் ரே | 500 | 250 |
| | 2. | நியான்சன் விளக்கு | 500 | 250 |
| | 3. | ஒருமுனை மின் கருவிகள் மற்றும் லைட்டிங் லோடு | இனம் 9–ல் உள்ளவாறு | இனம் 9–ல் உள்ளவாறு |
| | 4. | குறைந்தபட்ச ஆய்வு கட்டணம் | 1000 | 1000 |
| | 5. | மறு ஆய்வு கட்டணம் | மொத்தத் தொகையில் 50% | – |
| 11) | அடுக்கு மாடி கட்டடங்கள் (மின்னாக்கி மற்றும் இதர கருவிகள் சேர்த்தும், மின்மாற்றி நீங்கலாகவும்) | | | |
| | 1) | 15 மீட்டருக்கு மேல் 24 மீட்டர் வரை | 5000 | |
| | 2) | 24 மீட்டருக்கு மேல் | 10000 | |

**ஆ) வரைவு பட்டியல் கட்டணம்**

| | | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 1 | அதிக உயர் மின்னழுத்த மின்னமைப்பு (மின்மாற்றிகளின் ஒட்டுமொத்த திறன்) | | |
| | அ) புதியது | | |
| | 1) | 10000 கேவிஏ–வும் மற்றும் 10000 கேவிஏ வரை | 5000 |
| | 2) | 10000 கேவிஏ–க்கு மேல் | 10000 |
| | ஆ) கூடுதல் அல்லது மாற்றியமைத்தல் | | |
| | 1) | அதிக உயர் சுவட்ச் யார்டு மற்றும் இதர கருவிகள் (மின்மாற்றி நீங்கலாக) | 1000 |
| | 2) | 10000 கேவிஏ–வும் மற்றும் 10000 கேவிஏ வரை | 2500 |
| | 3) | 10000 கேவிஏ –க்கு மேல் | 5000 |
| 3 | உயர் மின்னழுத்த மின்னமைப்பு (மின்மாற்றிகளின் ஒட்டு மொத்த திறன்) | | |
| | அ) புதியது | | |
| | 1) | 500 கேவிஏ–வும் மற்றும் 500 கேவிஏ வரை | 1000 |
| | 2) | 500 கேவிஏ–வும் மற்றும் 2000 கேவிஏ வரை | 2000 |
| | 3) | 2000 கேவிஏ–க்கு மேல் | 4000 |
| 4 | ஆ) கூடுதல் மற்றும் மாற்றியமைத்தல் மற்றும் மின்மாற்றிகள் (பளு நீங்கலாக) | | |
| | 1) | 500 கேவிஏ–வும் மற்றும் 500 கேவிஏ வரை | 500 |

| | | | |
|---|---|---|---|
| | 2) | 500 கேவிஏ–வும் மற்றும் 2000 கேவிஏ வரை | 1000 |
| | 3) | 2000 கேவிஏ–க்கு மேல் | 2000 |
| 5) | ஆ) உயர் மின்னழுத்த கருவிகள் கூடுதல் மற்றும் மாற்றியமைத்தல் | | |
| | 1) | துணை மின்நிலைய மின்னமைப்பு (மின்மாற்றி நீங்கலாக) | 500 |
| | 2) | 1000 கி.வா/கேவிஏ ஆர் வரை | 500 |
| | 3) | 1000 கி.வா/கேவிஏ ஆர்–க்கு மேல் | 1000 |
| 6) | உயர் மின்னழுத்த மின்னாக்கிகள் | | |
| | 1) | 5000 கேவிஏ–வும் மற்றும் 5000 கேவிஏ வரை | 2000 |
| | 2) | 5000 கேவிஏ–வும் மற்றும் 10000 கேவிஏ வரை | 3000 |
| | 3) | 10000 கேவிஏ–க்கு மேல் | 5000 |
| 7) | நடுமின்னழுத்த மின்னாக்கிகள்/சோலார் இன்வெர்டர்கள் | | |
| | 1) | 100 கேவிஏ–வும் மற்றும் 100 கேவிஏ வரை | 250 |
| | 2) | 100 கேவிஏ–வும் மேல் மற்றும் 500 கேவிஏ வரை | 500 |
| | 3) | 500 கேவிஏ–வும் லே் மற்றும் 1000 கேவிஏ வரை | 1000 |
| | 4) | 1000 கேவிஏ–வும் மேல் | 1500 |
| 8) | நடு மின்னழுத்த கருவிகள் | | |
| | 1) | 100 கேவிஏ–வும் மற்றும் 100 கேவிஏ வரை | 250 |
| | 2) | 100 கேவிஏ–வும் மற்றும் 500 கேவிஏ வரை | 500 |
| | 3) | 500 கேவிஏ–க்கு மேல் | 1000 |
| | 4) | சுவிட்சு போர்டு/எப்டிபி/எம்சிபி போர்டுகள்/டிபி/எம்சிசி/ பிசிசி | 250 |
| 9) | அடுக்கு மாடி கட்டடம் (மின்னாக்கி மற்றும் இதர கருவிகள் சேர்த்தும், மின்மாற்றி நீங்கலாகவும்) | | |
| | 1) | 15 மீட்டருக்கு மேல் 24 மீட்டர் வரை | 2500 |
| | 2) | 24 மீட்டருக்கு மேல் | 5000 |

| | | | |
|---|---|---|---|
| இ) | மின் தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் நிறுவ அனுமதி வழங்கல்/ ஆய்வு கட்டணம் | | |
| | 1. | 5 நிறுத்தங்கள் உள்ள மின் தூக்கிகள் புதியது/நிறுவ அனுமதி வழங்கல் மற்றும் ஏற்கனவே உள்ளவற்றில் கூடுதல்/கருவி மாற்றங்களுக்கு | ரூ. 2500 தலா ஒரு மின் தூக்கி |
| | 2. | புதிய மின் தூக்கி நிறுவ அனுமதி/கூடுதல் அமைப்பிற்கு கருவி 5 நிறுத்தங்களுக்கு மேல் | ரூ.5000 தலா ஒரு மின்தூக்கி |
| | 3. | புதிய இயங்கும் படிக்கட்டுகள் அமைப்பிற்கு/கூடுதல் மற்றும் கருவி மாற்ற அமைப்பிற்கு அனுமதி வழங்கல் | ரூ.10,000 தலா ஒரு நகரும் படிக்கட்டு அமைப்பு |
| | 4. | 5 நிறுத்தங்கள் வரையான மின்தூக்கி உரிமம் வழங்கல்/உரிமம் புதுப்பித்தல் | ரூ.5000 மின்தூக்கி ஒன்றுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | 5. | 5 நிறுத்தங்களுக்கு மேல் மின்தூக்கி உரிமம் வழங்கல்/உரிமம் புதுப்பித்தல் | ரூ.10,000 மின்தூக்கி ஒன்றுக்கு |
| | 6. | மின்இயங்கும் படிகட்டுகள் அமைப்பிற்கு உரிமம் வழங்கல்/புதுப்பித்தல் | ரூ.10,000 ஒரு நகரும் படிக்கட்டுக்கு |
| ஈ) | மின் தூக்கிகள் மற்றும் இயங்கும் படிகட்டுகள் நிறுவனங்களில் நிறுவுதல், பராமரிப்பு, ஆய்வு மற்றும் சோதனை செய்ய அனுமதி மற்றும் அனுமதி புதுப்பித்தல் கட்டணம் | | |
| | 1 | மின் தூக்கி நிறுவுதல் மற்றும் பராமரித்தலுக்கான நிறுவனத்திற்கு அனுமதி வழங்கல் | ரூ. 20000/– |
| | 2 | மின் தூக்கிகள் பராமரித்தலுக்கான நிறுவனத்திற்கு அனுமதி வழங்கல் | ரூ. 10000/– |
| | 3 | இயங்கும் படிக்கட்டு நிறுவுதல் மற்றும் பராமரித்தலுக்கான நிறுவனத்திற்கு அனுமதி வழங்கல் | ரூ. 20000/– |
| | 4 | இயங்கும் படிக்கட்டுகள் பராமரித்தலுக்கான நிறுவனத்திற்கு அனுமதி வழங்கல் | ரூ. 10000/– |
| | 5 | மின் தூக்கி நிறுவுதல் மற்றும் பராமரித்தல் நிறுவனங்களுக்கான உரிமம் புதுப்பித்தல் | ரூ. 10000/– |
| | 6 | மின் தூக்கி பராமரித்தல் நிறுவனங்களுக்கான உரிமம் புதுப்பித்தல் | ரூ. 5000/– |
| | 7 | இயங்கும் படிக்கட்டுகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல் நிறுவனங்களுக்கான உரிமம் புதுப்பித்தல் | ரூ. 10000/– |
| | 8 | மிஇயங்கும் படிக்கட்டுகள் பராமரித்தல் நிறுவனங்களுக்கான உரிமம் புதுப்பித்தல் | ரூ. 5000/– |
| உ) | திரையரங்க ஆய்வு கட்டணம் | | |
| | 1. | புதிய திரையரங்கம் மற்றும் ஏற்கனவே உள்ள திரையரங்கில் கூடுதல்/கருவிமாற்ற வரைபட ஒப்புதல் | ஆய்வு கட்டணம் இல்லை |
| | 2. | புதிய நிரந்தரம்/பகுதி நிரந்தர திரையரங்கம் ஆய்வு | ரூ.1500 |
| | 3. | நிரந்தர/பகுதி நிரந்தர திரையரங்கின் மின்சான்று புதுப்பித்தல் | ரூ.1200 (உரிமம் முடிவடையும் நாளுக்கு மூன்று திங்கள் முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். தவறினால் மாதம் ஒன்றுக்கு ரூ.150 தண்ட கட்டணம்) |
| | 4. | இரண்டாம் படி மின்சான்று வழங்கல் | ரூ.25 |
| | 5. | புதிய நகரும் திரையரங்கம் | ரூ.450 |

| | | | |
|---|---|---|---|
| | 6. | நகரும் திரையரங்கம் உரிமம் புதுப்பித்தல் | ரூ.200 (உரிமம் முடிவடையும் நாளுக்கு மூன்று திங்கள் முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். தவறினால் மாதம் ஒன்றுக்கு ரூ.67 தண்ட கட்டணம்) |
| | 7. | திறந்தவெளி திரையரங்கம் | ரூ.25/–ஒரு புதுப்பித்தலுக்கு |

ஊ) அரசு தர நிர்ணய ஆய்வுக்கூடம்/சென்னை மற்றும் கோவை, திருச்சி, மதுரை ஆகியவற்றிலுள்ள மொபைல் ஆய்வகத்தில் கருவிகள் மற்றும் மீட்டர்களின் துல்லியத்தினை சோதனை செய்வதற்கான கட்டணம் :-

| வ. எண். | கருவிகள் மற்றும் சோதனை விவரங்கள் | கட்டண விகிதம் |
|---|---|---|
| 1. | மின்னோட்ட அளவிகள் (துல்லியமாக 0.5 க்கு மேல்) | |
| | 100A வரை | ரூ.100 |
| | 100A –க்கு மேல் மற்றும் 1200A வரை உள்ளடக்கியது | ரூ.150 |
| | ஒவ்வொரு கூடுதல் வரம்பிற்கும் 50 சதவீதம் கட்டணம் | |
| 2. | மின்னழுத்த அளவிகள் (துல்லியமாக 0.5 க்கு மேல்) | |
| | 600V வரை | ரூ.100 |
| | 600V –க்கு மேல் மற்றும் 1000 V வரை உள்ளடக்கியது | ரூ.150 |
| | ஒவ்வொரு கூடுதல் வரம்பிற்கும் 50 சதவீதம் கட்டணம் | |
| 3. | ஆற்றல் அளவி | |
| | ஒருமுனை ஆற்றல் அளவி | ரூ.100 |
| | 50A வரை பண்முக அளவி | ரூ.200 |
| | 50A –க்கு மேலான மற்றும் 100A வரை பன்முக அளவி | ரூ.300 |
| 4. | மின்சக்தி காரணி அளவி | ரூ.200 |
| 5. | ஏர்த் ரெசிஸ்டென்ஸ் டெஸ்டர் | ரூ.100 |
| 6. | அ) இன்சுலேஷன் ரெசிஸ்டென்ஸ் டெஸ்டர் 500V, 100MΩ வரை | ரூ.100 |
| | ஆ) இன்சுலேஷன் ரெசிஸ்டென்ஸ் டெஸ்டர் 1000V, 200MΩ வரை | ரூ.150 |
| 7. | டிரிவெக்டர் மீட்டர் (மாற்றியமைக்க) | ரூ.500 |
| | டிரிவெக்டர் மீட்டர் (அளவுத்திருத்தம் மற்றும் சரிசெய்தல்) | ரூ.2000 |
| 8. | தீ அணைப்பான் | ரூ.50 |
| 9. | கட்ட வரிசை காட்டி **(50Hz, 100-600V)** | ரூ.50 |
| 10 | மின்னோட்ட அளவி – மின்னழுத்த அளவி – ஓம் அளவி பல – தூர சோதனை | |
| | அ) அனைத்து வரம்புகளுக்கும் 300A வரை மற்றும் | ரூ.200 |

| | | |
|---|---|---|
| | அதனை உள்ளடக்கியது | |
| | ஆ) 300A மேலான மற்றும் அனைத்து வரம்புகளுக்கும் 600A வரை மற்றும் அதனை உள்ளடக்கியது | ரூ.250 |
| | இ) 300A மேலான மற்றும் அனைத்து வரம்புகளுக்கும் 600A வரை மற்றும் அதனை உள்ளடக்கியது | ரூ.300 |
| | ஈ) அனைத்து வரம்புகளுக்கும் 750A வரை மற்றும் அதனை உள்ளடக்கியது | ரூ.150 |
| | உ) 750A மேலான மற்றும் அனைத்து வரம்புகளுக்கும் 1000A வரை மற்றும் அதனை உள்ளடக்கியது | ரூ.200 |
| | ஊ) ஓம் மீட்டர் | ரூ.100 |
| 11. | மின்னோட்ட அளவிகள் (துல்லியமாக 0.5–க்கு மிகாமல்) | |
| | 20A வரை | ரூ.200 |
| | 20A மேலான மற்றும் அனைத்து வரம்புகளுக்கும் 100A வரை மற்றும் அதனை உள்ளடக்கியது | ரூ.300 |
| | 20A-க்கு மேல் | ரூ.400 |
| | ஒவ்வொரு கூடுதல் வரம்பிற்கும் 50 சதவீதம் கட்டணம் | |
| 12. | மின்னழுத்த அளவிகள் (துல்லியமாக 0.5–க்கு மிகாமல்) | |
| | 750A வரை | ரூ.200 |
| | 750A-க்கு மேல் | ரூ.300 |
| | ஒவ்வொரு கூடுதல் வரம்பிற்கும் 50 சதவீதம் கட்டணம் | |
| 13. | வாட்மீட்டர் | |
| | அ) ஒரு முனையில் ஒரு மின் வரம்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தம் | ரூ.300 |
| | ஆ) பலமுனையில் ஒரு மின் வரம்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தம் | ரூ.750 |
| | ஒவ்வொரு கூடுதல் மின்னோட்டத்திற்கும் 50 சதவீதம் கூடுதல் கட்டணமாகவும் மற்றும் ஒவ்வொரு கூடுதல் மின்னழுத்த வரம்பிற்கு 100 சதவீதம் கூடுதல் கட்டணம் | |
| 14 | சுழலும் துணை தர மீட்டர்கள் (Rotating Sub Standard Meters) | |
| | அ) ஒருமுனையில் ஒரு மின் வரம்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தத்தம் மற்றும் எந்த இரண்டு மின்காரணிகள் | ரூ.1000 |
| | ஆ) பலமுனையில் ஒரு மின் வரம்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தம் மற்றும் எந்த இரண்டு மின்காரணிகள் | ரூ.2000 |
| | இ) ஒருமுனை அல்லது பலமுனை மாற்றியமைத்தல் | ரூ.500 |
| | ஒவ்வொரு கூடுதல் மின்னோட்டத்திற்கும் 50 சதவீதம் கூடுதல் கட்டணமாகவும் மற்றும் ஒவ்வொரு கூடுதல் மின்னழுத்த வரம்பிற்கு 100 சதவீதம் கூடுதல் கட்டணம் மற்றும் ஒவ்வொரு கூடுதல் மின்காரணிக்கும் 10 சதவீதம் கூடுதல் கட்டணம் | |
| 15. | எலக்ட்ரானிக் சப் ஸ்டாண்டர்ட் மீட்டர் (வகுப்பு 0.2 வரை மற்றும் உள்ளடக்கியது) | |
| | அ) ஒருமுனையில் ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தத்தில் ஒற்றை கட்டம் மற்றும் எந்த இரண்டு சக்தி | ரூ.1000 |

| | | |
|---|---|---|
| | காரணிகளிலும் 5 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை சுமை . | |
| | ஆ) மும்முனையில் ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தத்தில் மூன்று கட்ட நான்கு கம்பி மற்றும் எந்த இரண்டு சக்தி காரணிகளிலும் 5 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை சுமை. | ரூ.2000 |
| | இ) ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தத்தில் மேலே குறிப்பிடப்பட்ட 35 மீட்டரில் ஒற்றை கட்ட பயன்முறையில் கூடுதல் மற்றும் எந்த இரண்டு சக்தி காரணிகளிலும் 5 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை சுமை. | ரூ.1000 |
| | ஈ) ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தத்தில் மூன்று கம்பி மற்றும் செயலிலுள்ள எந்த இரண்டு சக்தி காரணிகளிலும் 5 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை சுமை. | ரூ.2000 |
| | உ) ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தத்தில் மூன்று கட்ட மூன்று கம்பி மற்றும் எதிர்வினை பயன்முறையில் எந்த இரண்டு சக்தி காரணிகளிலும் 5 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை சுமை. | ரூ.2000 |
| | ஊ) ஒரு குறிப்பிட்ட மின்னழுத்தத்தில் மூன்று கட்ட மூன்று கம்பி மற்றும் வெளிப்படையான பயன்முறையில் எந்த இரண்டு இரண்டு சக்தி காரணிகளிலும் 5 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை சுமை | ரூ.2000 |
| | ஒவ்வொரு கூடுதல் மின்னோட்டத்திற்கும் கூடுதல் 50 சதவீதம் கட்டணம், ஒவ்வொரு கூடுதல் மின்னழுத்த வரம்பிற்கான கூடுதல் 100 சதவீதம் மற்றும் கூடுதல் மின்காரணிக்கும் கூடுதல் 10 சதவீதம் கட்டணம். | |
| 16 | மின்னோட்ட மின்மாற்றியின் (CT) சோதனை விகிதிம் | |
| | 100A வரை | ரூ.200 |
| | 100A மேலான மற்றும் அனைத்து வரம்புகளுக்கும் 500A வரை மற்றும் உள்ளடக்கியது | ரூ.300 |
| | 500A-க்கு மேலான | ரூ.400 |
| 17 | உயர் மின்னழுத்த சோதனை | |
| | அ) LT/MV சுவிட்ச் கியர்ஸ், பாகங்கள், மோட்டர்கள் | ரூ.200 |
| | ஆ) ஒரு மூலத்திலிருந்து மூன்று மாதிரிகள் வரை மின்மாற்றி எண்ணெய் மின்கடத்தா சோதனை | ரூ.250 |
| | இ) ஒரு மூலத்திலிருந்து மூன்று மாதிரிகள் வரை மின்மாற்றி எண்ணெயில் அமிலத்தன்மை சோதனை | ரூ.150 |
| | ஈ) ஒவ்வொரு இணையின் காப்பு வலிமைக்கும் இரப்பர் கையுறைகள் | ரூ.100 |
| | உ) உயர்மின்னழுத்த சுவிட்ச் கியர் | ரூ.2000 |
| | ஊ) உயர்மின்னழுத்த சுவிட்ச் கியர் பலகை | ரூ.1000 |
| | எ) உயர்மின்னழுத்த/நடு மின்னழுத்த மின்மாற்றியின் வின்டிங்ஸ் | ரூ.2000 |
| | ஏ) ஒருமுனை புதைவடம் | ரூ.1000 |
| | ஐ) பலமுனை மல்டிகோர் புதைவடம் | ரூ.2000 |
| | ஒ) மின்மாற்றிகள் மற்றும் மோட்டர்கள் ஸ்டேட்டர் வின்டிங்ஸ் | ரூ.2000 |

| | | |
|---|---|---|
| 18 | உயர் மின்னழுத்த சோதனை கிட் | |
| | அ) 10 கேவி–வும் மற்றும் 10 கேவி வரை | ரூ.1000 |
| | ஆ) 10 கேவி–வும் மேல் மற்றும் 20 கேவி வரை | ரூ.1500 |
| | இ) 20 கேவி–வும் லே் மற்றும் 40 கேவி வரை | ரூ.2000 |
| 19 | ரிலேஸ் எர்த் பால்ட் மற்றும் ஒவர் கரண்ட் (Earth fault & Over Current) | ரூ.250 |
| 20 | சர்ச்சைக்குரிய உபகரணங்கள்/மோட்டர்ஸ் | |
| | அ) இண்டக்ஷன் மோட்டர்ஸ் 15– 3 HP வரை | ரூ.500 |
| | ஆ) இண்டக்ஷன் மோட்டர்ஸ் 15– 3 HP மேலான மற்றும் 15 HP உள்ளடக்கியது | ரூ.1000 |
| | இ) இண்டக்ஷன் மோட்டர்ஸ் 15–15 HP மேலான மற்றும் 30 HP உள்ளடக்கியது | ரூ.2000 |
| | ஈ) ஆற்றல் மீட்டர் | ரூ.1000 |
| | உ) ட்ரைவெக்டர் மீட்டர் | ரூ.2000 |

11) <u>உங்களுக்கு சிறப்பான சேவை வழங்க, எங்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவ முடியும் ?</u>

1) தயவு கூர்ந்து உங்களது விண்ணப்பத்தினை உரிய காலத்திற்கு முன்னரே அனுப்பி வைக்கவும்.

2) தயவு கூர்ந்து, உங்களது விண்ணப்பத்தினை முழு வடிவத்திலும், அனைத்து விபரங்கள் மற்றும் இணைப்புகளுடன்அனுப்பி வைக்கவும்.

3) தயவு கூர்ந்து திரையரங்கம், மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் உரிமங்களை/சான்றிதழ்களை புதுப்பிக்க, உரிமம் முடிவடையும் நாளுக்கு, மூன்று திங்களுக்கு முன்னரே தேவையான ஆய்வுக் கட்டணத்துடன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

12) <u>எதிர்கால செயல்பாடுகள்</u>:–

எங்களது சேவை குறித்த உங்களது கருத்துகளை வரவேற்கிறோம். எங்களின் செயல் முறைகளை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் முன்னெடுப்போம். உங்களது கருத்துகளின் அடிப்படையில், நாங்கள் எங்களது சாசனத்தினை மறு பரிசீலனை செய்தோ அல்லது மாற்றியோ அமைப்போம்.

**<u>அஞ்சல் முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் கூடிய கோட்ட அலுவலகங்களின் பட்டியல்</u>**

| வ. எண் | அலுவலக முகவரி | தொலைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 1. | அரசு தலைமை மின் ஆய்வாளர்,<br>திரு.வி.க.தொழிற்பேட்டை,<br>கிண்டி, சென்னை – 600 032. | 044-22500796 | ceig@tn.gov.in |
| 2. | முதுநிலை மின் ஆய்வாளர் (கோவை)<br>மாநகராட்சி வணிக வளாகம்,<br>2–வது தளம், மரு. நஞ்சப்பா சாலை,<br>கோவை – 641 018. | 0422-2380223 | seicbe@tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 3. | மின் ஆய்வாளர்/கோவை (வடக்கு),<br>மாநகராட்சி வணிக வளாகம்,<br>முதல் தளம், மரு. நஞ்சப்பா சாலை, கோவை – 641 018. | 0422-2380224 | eicben@tn.gov.in |
| 4. | மின் ஆய்வாளர்/கோவை (தெற்கு),<br>மாநகராட்சி வணிக வளாகம்,<br>முதல் தளம், மரு. நஞ்சப்பா சாலை, கோவை – 641 018. | 0422-2380225 | eicbes@tn.gov.in |
| 5. | மின் ஆய்வாளர்/மதுரை,<br>எண் 618, கற்பக நகர், 10–வது தெரு, கோ.புதூர்,<br>மதுரை – 625 007. | 0452-2565561 | eimdu@tn.gov.in |
| 6. | மின் ஆய்வாளர் / திருச்சி,<br>எண் 13, என்.எம்..பங்களா ரோடு,<br>டி.வி.எஸ். டோல்கேட்,<br>திருச்சி – 620 020. | 0431-2316770 | eitry@tn.gov.in |
| 7. | மின் ஆய்வாளர் / வேலூர்,<br>எண் 19, 10–வது கிழக்கு மெயின் ரோடு, முதல் தளம், T.N.E.B. எதிரில், கிழக்கு காந்தி நகர்,<br>வேலூர் – 632 006. | 0416-2243588 | eivlr@tn.gov.in |
| 8. | மின் ஆய்வாளர் / திண்டுக்கல்,<br>எண் 45/1, ஸ்பென்சர் காம்பவுண்டு, 2–வது தளம், 6வது குறுக்குத் தெரு, திண்டுக்கல் – 624 003. | 0451-2420450 | eidgl@tn.gov.in |
| 9. | மின் ஆய்வாளர் / கிருஷ்ணகிரி,<br>எண் 3/1B, 3வது குறுக்குத் தெரு,<br>(மோகன் ராவ் காலனி)<br>கிருஷ்ணகிரி – 635 001. | 04343-233266 | eikrg@tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 10. | மின் ஆய்வாளர் / சேலம்,<br>எண் 2/120/234, ஸ்ரீபாலமுருகன் டவர்ஸ் (இரண்டாம் தளம்) (நெத்திமேடு துணை மின்நிலையம் பேருந்து நிலையம் அருகில்), சங்ககிரி மெயின் ரோடு, நெத்திமேடு,<br>சேலம் – 636002. | 0427-2461333 | eislm@tn.gov.in |
| 11. | மின் ஆய்வாளர் / சூலூர்,<br>சூலூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்க கட்டிடம், எண் 4, 13.B, எஸ்.ஆர்எஸ்.புரம், கலங்கல் ரோடு, சூலூர் – 641 402. | 0422-2688305 | eisul@tn.gov.in |
| 12. | மின் ஆய்வாளர் / பல்லடம்,<br>எண்.17, முனியப்பன் கோவில் தெரு, பல்லடம் தாலுக்கா, மேற்கு பல்லடம், திருப்பூர் – 641 664. | 04255-255599 | eiplm@tn.gov.in |
| 13. | மின் ஆய்வாளர் / திருநெல்வேலி,<br>எண். B21/2, NGO “B” காலனி, ஜவஹர் நகர், திருநெல்வேலி– 627 007. | 0462-2530343 | eitin@tn.gov.in |
| 14. | மின் ஆய்வாளர் / ஈரோடு<br>எண் 106, காந்திஜி ரோடு, ஜவான்ஸ் பவன் முதல் தளம், ஈரோடு – 638 001. | 0424-2215512 | eiede@tn.gov.in |
| 15. | மின் ஆய்வாளர் / திருப்பூர்,<br>அறை எண் 651, 652, 6வது தளம், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், பல்லடம் ரோடு,<br>திருப்பூர் – 641 604. | 0421-2971189 | eitpr@tn.gov.in |
| 16. | மின் ஆய்வாளர் / விருதுநகர்,<br>2/800/6A, வ .உ.சி. நகர்,சூலக்கரை மேடு மேற்கு, விருதுநகர் – 626 003. | 04562-252912 | eivnr@tn.gov.in |
| 17. | மின் ஆய்வாளர் / கடலூர்,<br>எண் 10, முதல் தளம், தண்டபாணி நகர், (மாருதி மருத்துவமனை அருகில்), செம்மண்டலம்,<br>கடலூர் – 607 001. | 04142-233764 | eicud@tn.gov.in |
| 18. | மின் ஆய்வாளர் / நாமக்கல்,<br>எல்.எம். ஆர்.ஆர். கேட், 2வது தளம்,<br>சேலம் மெயின் ரோடு, நாமக்கல் – 637 001. | 04286-275777 | einkl@tn.gov.in |
| 19. | மின் ஆய்வாளர் / பொன்னேரி,<br>எண். 1/108, பஜனைகோவில் தெரு,<br>பொன்னேரி, திருவள்ளூர் – 601204. | 044-27293337 | eipon@tn.gov.in |
| 20. | மின் ஆய்வாளர் / செங்கல்பட்டு,<br>எண். 59/32, ஆர்.வி.தெரு, அழகேசன் நகர்,<br>செங்கல்பட்டு – 603031. | 044-27426540 | eicgl@tn.gov.in |
| 21. | மின் ஆய்வாளர் / ஸ்ரீபெரும்புதூர்,<br>பிளாட் எண். 44, ஏ.எல்.எஸ்.<br>நேதாஜி நகர். என்.ஜி.ஓ. காலனி, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம்– 602105. | 044-27162916 | eispr@tn.gov.in |
| 22. | மின் ஆய்வாளர் / தாம்பரம்,<br>எண். 77, பாரதி நகர் 5–வது தெரு,<br>பழைய பெருங்களத்தூர், | 044-22762316 | eitmb@tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| | பிளாட் எண் ஜி2, முடிச்சூர் மெயின்ரோடு, தாம்பரம் அஞ்சல், சென்னை–600 063. | | |
| 23. | மின் ஆய்வாளர் / அம்பத்தூர், பிளாட் எண். 36, ஐஸ்வரியா நகர், எம்டிஎச். ரோடு, அம்பத்தூர், சென்னை – 600 053. | 044-26581755 | eiamb@tn.gov.in |
| 24. | மின் ஆய்வாளர்/சென்னை (வடக்கு), திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032. | 044-22500796 | eichnn@tn.gov.in |
| 25. | மின் ஆய்வாளர்/சென்னை (தெற்கு), திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032. | 044-22500796 | eichns@tn.gov.in |

**இத்துறைச் சார்ந்த முக்கிய அதிகாரிகள்**

| வ.எண் | பதவி | தொடர்பு கொள்ள வேண்டிய விவரம் |
|---|---|---|
| 1. | அரசு முதன்மைச் செயலாளர், எரிசக்தித்துறை | Phone :+91 44 - 25671496,<br>PABX-5975(O)<br>Fax :25672923<br>E-Mail : enersec@tn.gov.in |
| 2. | அரசு தலைமை மின்ஆய்வாளர் | Phone :<br>+91 44 2250 0184, 2250 0227<br>+91 44 2250 0430, 2250 0796<br>+91 44 2250 0915 (Direct)<br>Fax :+91 44 2250 0036<br>Email: ceig@tn.gov.in |
| 3. | முதுநிலை மின்ஆய்வாளர்/தலைமையகம் | Phone :<br>+91 44 2250 0184, 2250 0227<br>+91 44 2250 0430, 2250 0796<br>Email: seichn@tn.gov.in |
| 4. | முதுநிலை மின்ஆய்வாளர்/கோவை | Phone :+91 422 2380 223<br>Email: seicbe@tn.gov.in |

உரிய பணிகளுக்கான விண்ணப்பங்கள் பின்வரும் அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

| வ. எண் | வேலை வகைப்பாடு மற்றும் மின் அமைப்புகள் | அதிகாரங்களும் வேலைகளும் (வேலை வகைப்பாடு) | உதவி மின் ஆய்வாளர் | மின் ஆய்வாளர் | முதுநிலை மின் ஆய்வாளர் | அரசு தலைமை மின் ஆய்வாளர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| 1. | 650 வோல்ட்–க்கு அதிகமான புதிய மற்றும் கருவி மாறுதல் மின்னமைப்புகள் /15 மீட்டர் உயரத்திற்கு மேலுள்ள அடுக்கு மாடி கட்டடங்கள் | வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்கல் | – | 630 கேவிஏ திறன் வரை நிறுவப்பட்ட மின்மாற்றி/ மின்னாக்கி/650 வோல்ட்–க்கு அதிகமான மின்பளு உள்ள நிறுவனங்களில் வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்குதல் | 630 கேவிஏ திறனுக்கு அதிகமாகவும் 2500 கேவிஏ திறன் வரையுள்ள நிறுவப்பட்ட மின்மாற்றி/ மின்னாக்கி/ 650 வோல்ட் அதிகமான மின்பளு உள்ள நிறுவனங்களில் வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்குதல். | 2500 கேவிஏ திறனுக்கு அதிகமான நிறுவப்பட்ட மின்மாற்றி/மின்னாக்கி/ 650 வோல்ட் அதிகமான மின்பளு உள்ள நிறுவனங்களில் வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்குதல். |
| | – | வரைபட கூர்ந்தாய்வு செய்தல், ஆய்வு செய்தல் மற்றும் அனுமதி வழங்குதல் | – | 630 கேவிஏ திறன் வரையான மின்னாக்கி மற்றும் 650 வோல்ட் வரையான மின் பளு அமைப்புகளுக்கு மின் வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்குதல் | 630 கேவிஏ திறனுக்கு அதிகமாகவும் 2500 கேவிஏ திறன் வரையுள்ள 650 வோல்ட் வரை மின்னாக்கி உள்ள நிறுவனங்களில் வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்குதல். | |
| 2. | 650 வோல்ட் வரையுள்ள 15 மீட்டருக்கும் அதிகமான உயரமுடைய அடுக்குமாடி கட்டடங்கள் | வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்கல் | – | அடுக்குமாடி கட்டடங்களுக்கு வரைபட கூர்ந்தாய்வு, ஆய்வு மற்றும் அனுமதி வழங்குதல் | – | – |
| 3. | காலமுறை ஆய்வு | 650 வோல்ட்–க்கு மேற்பட்ட மின் அமைப்புகளில் காலமுறை ஆய்வுகள் | 630 கேவிஏ வரையான மின் மாற்றி அமைப்புகளுக்கு காலமுறை ஆய்வு | 630 கேவிஏ–க்கு அதிகமான திறனுள்ள மின் மாற்றி அமைப்புகளில் காலமுறை ஆய்வு | – | – |
| | | மின் தொகுப்பு பல வழி தொடர்பு மின் உற்பத்தி அலகுகளில் | 2 மெகா வாட் திறன் வரை மின் தொகுப்பு பலவழி தொடர்பு | 2 மெகா வாட் திறனுக்கு அதிகமான 250 மெகா வாட் வரை | 250 மெகா வாட் திறனுக்கு மேலான மின் | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | காலமுறை ஆய்வுகள் | மின் உற்பத்தி அலகுகளில் காலமுறை ஆய்வுகள் | மின் தொகுப்பு பலவழி தொடர்பு மின் உற்பத்தி அலகுகளில் காலமுறை ஆய்வுகள் | தொகுப்பு பலவழி தொடர்பு மின் உற்பத்தி அலகுகளில் காலமுறை ஆய்வுகள் | |
| | | துணை மின்நிலையங்களின் நியம மற்றும் காலமுறை ஆய்வுகள் | 33 கிலோ வோல்ட் வரையிலான துணை மின்நிலையங்கள் மற்றும் பகிர்வு மின்மாற்றிகளின் காலமுறை ஆய்வுகள் | 33 கிலோ வோல்ட்–க்கு மேற்பட்ட துணை மின்நிலையங்களின் காலமுறை ஆய்வுகள் | | – |
| 4. | 650 வோல்ட் திறனுக்கு குறைவான மின் உற்பத்தி மட்டும் உள்ள நிறுவனங்களில் | ஆய்வுகள் | 630 கேவிஏ திறன் வரையான மின் உற்பத்தி அலகு மட்டும் உள்ள நிறுவனங்களில் ஆய்வு செய்தல் | 630 கேவிஏ–க்கும் அதிகமான திறனுள்ள மின் உற்பத்தி அலகு மட்டுமே உள்ள நிறுவனங்களில் ஆய்வு செய்தல் | – | – |
| | | அனுமதி வழங்குதல் | – | அனைத்தும் | – | – |
| 5. | மிக மிக முக்கிய நபர் வருகைக்காக மற்றும் பொது கூட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மின் அமைப்புகள் | ஆய்வு செய்தல் மற்றும் அனுமதி வழங்குதல் | மிக மிக முக்கிய நபர் வருகைக்காகவும் மற்றும் பொது கூட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மின் அமைப்புகளில் ஆய்வு செய்தல் மற்றும் அறிக்கை அளித்தல் | மிக மிக முக்கிய நபர் வருகைக்காகவும் மற்றும் பொது கூட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மின் அமைப்புகளுக்கு அனுமதி வழங்குதல் | – | – |
| 6. | மின் விபத்துகள் | மின் விபத்துகளை புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை அளித்தல் | 650 வோல்ட் வரையான மின்னமைப்புகளில் ஏற்பட்ட மின் விபத்துகளை புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை அளித்தல். | 650 வோல்ட்–க்கு அதிகமான மின்னமைப்புகளில் ஏற்பட்ட மின் விபத்துகளை புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கை அளித்தல். | | |

<u>குறிப்பு:</u>

1. பதிவு செய்யப்பட்ட சிறப்பு நேர்வுகளின் அடிப்படையில், கீழ் பதவியில் உள்ளவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களையும் செயல்பாடுகளையும், உயர் பதவியில் உள்ளவர்களும் மேற்கொள்ளலாம்.

2. சார்நிலை அலுவலர்களுக்கு குறிப்பிடப்படாத பிற வகையான பணிகளையும், மேலும் மேலே ஏற்படுத்திய கட்டுப்பாடுகளையும் அரசு தலைமை மின் ஆய்வாளர் மேற்கொள்ளலாம்.

## <u>தமிழ்நாடு மின்உரிமம் வழங்கும் வாரியம்</u>

## 1.0 மின் உரிமம் வழங்கும் வாரியம் குறித்த கண்ணோட்டம்

மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (மின்வழங்குதல் மற்றும் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகள்) ஒழுங்குமுறை விதிகள், 2010–ன் ஒழுங்குமுறை விதி 29 (1) (இந்திய மின்சார விதிகள் 1956–ன் விதி 45)–ல், மாநில அரசால் வழங்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட மின் தகுதி சான்றிதழ் உரிமம் உடைய நபரின் நேரிடை கண்காணிப்பில், மின் ஒப்பந்ததாரரால் மட்டுமே மின் அமைப்புகளில் கூடுதல் கருவி அமைக்க, கருவிகள் மாற்றியமைக்கும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநில அரசின் சார்பாக மின்கம்பியாளர், மின்கம்பியாளரின் உதவியாளர் மற்றும் மின் மேற்பார்வையாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ் மற்றும் மின் ஒப்பந்ததாரர்களுக்கு உரிமம் வழங்குதல், மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் துணை மின் நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியாளர் சான்றிதழ் வழங்குவதற்கும் என தமிழ்நாடு அரசாணை (நிலை) எண் 4317, பொதுப்பணித்துறை நாள் 16.11.1995–ன் படி "மின் உரிமம் வழங்கும் வாரியம்" நிறுவப்பட்டு, பின்னர் அரசாணை (நிலை) எண் 1704, பொதுப்பணித்துறை, நாள் 1.7.1986–ன்படி மறுசீரமைக்கப்பட்டு, மேற்கண்ட பணிகளை அரசின் சார்பாக செய்து வருகிறது.

## 2.0 மின் உரிமம் வழங்கும் வாரியத்தின் செயல்பாடுகள்

1. மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 2010–ன் விதி 29(1)–ன்படி மாநிலத்தில் மின்கம்பியாளர், மின்கம்பியாளரின் உதவியாளர் மற்றும் மின் மேற்பார்வையாளர் சான்றிதழ் மற்றும் மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் துணை மின் நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கு "இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியாளர்களுக்கு புதிய சான்றிதழ் வழங்கல் மற்றும் புதுப்பித்தல்" ஆகியவற்றை செயல்படுத்துதல்.

2. மின் ஒப்பந்ததாரர்களுக்கு உரிமம் வழங்குதல் ; மற்றும்

3. மின்கம்பியாளர் உதவியாளர், மின்கம்பியாளர், மின் மேற்பார்வையாளர் சான்றிதழ், மின் ஒப்பந்தக்காரர்உரிமம் உடையவர்களுக்கிடையே ஏற்படும் குற்றச்சாட்டுகள், மோசடிகள், ஒழுக்கக்கேடு, தவறான நடைமுறை மற்றும் நிபந்தனைகளை மீறும் செயல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளுதல்.

## 3.0 வாரிய உறுப்பினர்கள்

1. அலுவல்வழி தலைவர் மற்றும் பொருளாளராக அரசு தலைமை மின் ஆய்வாளர்.

2. செயலாளராக தற்போது மின் ஆய்வு துறையிலிருந்து ஒருவர் அயற்பணியில் கூடுதல் பொறுப்பில் பணி புரிகிறார்.

3. இயக்குநர் (பயிற்சி)–தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்.

4. இணை இயக்குநர் – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை.

5. மேற்பார்வை பொறியாளர், மத்திய மின்சார ஆணையம், சென்னை.

6. மேற்பார்வை பொறியாளர், மத்திய பகிர்மானம், சென்னை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்.

7. மேற்பார்வை பொறியாளர், (இயக்குதல்) எண்ணூர். தெர்மல் பவர் ஸ்டேசன்.

8. மேற்பார்வை பொறியாளர், (மின்சாரம்),பொதுப்பணித்துறை

9. செயல் இயக்குநர்–தேசிய மின்சார பயிற்சி நிலையம் – நெய்வேலி.

10. துணை பொது மேலாளர் (மின்சாரம்) நெய்வேலி அனல் மின்நிலையம் – நெய்வேலி.

11. துறைத் தலைவர் (மின்னியல்) மத்திய பல்தொழில்நுட்ப கல்லுரரி, சென்னை

12. ‘A’ கிரேடு மின் ஒப்பந்ததாரர்களின் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர்

13. ‘B’ கிரேடு மின் ஒப்பந்ததாரர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர்

## 4.0 பணியின் தரங்கள்

பொதுமக்களுக்கு, உயர்ந்தபட்ச தரமான சேவை செய்ய நாங்கள் கடமைப் பட்டுள்ளோம். பொதுமக்களுக்கு எங்களின் சேவையை அதிகரிக்க, இந்த சாசனம் சில அளவீடுகளை ஏற்படுத்தியுள்ளது. எங்களின் அதிக செயல்திறனால் கீழ்க்கண்ட அளவிலான சேவையை அடைய ஒவ்வொரு நேரமும் செயல் அளவின் தரத்தை உயர்த்த மிகவும் முயற்சிக்கப்படுகிறது.

(i) சான்றிதழ் மற்றும் உரிமங்களை வழங்குதல் : 60 நாட்கள்

(சான்றிதழ் மற்றும் உரிமங்களை புதுப்பிக்க கோரும் விண்ணப்பங்கள் அவைகள் முடிவடையும் நாளிலிருந்து 90 நாட்களுக்கு முன்னர் இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.)

(ii) சான்றிதழ் மற்றும் உரிமங்களை புதுப்பித்தல் : 30 – 60 நாட்கள் விண்ணப்பம் பெற்றதிலிருந்து.

## 5.0 முறையீடுகளின் தீர்மான வழிமுறைகள்

நாங்கள் அளிக்கும் சேவை குறித்த புகார்களை வாரியத்தின் செயலருக்கு கடிதம் மூலமாக தெரிவிக்கலாம். நீங்கள், உங்களின் புகார்கள் உயர் அலுவலரின் கவனத்திற்கு செல்ல வேண்டும் என நினைத்தால் தலைவர், மின் உரிம வாரியத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

## 6.0 முறையீடுகளை கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்

ஏழு தினங்களுக்குள் உங்களின் முறையீடுகளுக்கு நாங்கள் ஏற்பளிப்பு செய்கிறோம். மேலும், முப்பது தினங்களுக்குள், முறையீடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரம் அளிக்கிறோம். பெறப்பட்ட அனைத்து புகார்கள் மற்றும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பதிவேட்டினை நாங்கள் பராமரித்து வருகிறோம். இந்த சாசனத்தின்படி நாங்கள் எங்களது செயல் தரத்தினை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் மற்றும் அதன் விபரங்களை ஆண்டு அறிக்கையில் அளிக்கிறோம்.

## 7.0 உங்களுக்கு சிறப்பான சேவை வழங்கிட நீங்கள் எவ்வாறு எங்களுக்கு உதவ முடியும் ?

1. தயை கூர்ந்து, விண்ணப்பங்களை முழுமையாக பூர்த்தி செய்து அனைத்து இணைப்புகளுடன் அனுப்பி வைக்கவும்.
2. தயை கூர்ந்து, சரியான ஆய்வு கட்டணம் மற்றும் தண்டக் கட்டணம் (இருப்பின்) சேர்த்து அனுப்பவும்.
3. தயை கூர்ந்து, விண்ணப்பத்தில் தங்களது உரிம எண், தகுதி சான்றிதழ் எண் ஆகியவைகளை மறக்காமல் குறிப்பிடவும்.
4. தயை கூர்ந்து, அனைத்து தரவுகளையும் முறையாக தொகுத்து, இணைப்புகளை தைத்து உறைக்குள் வைக்கும் முன் பார்த்துக் கொள்ள வேண்டும்.
5. தயை கூர்ந்து விண்ணப்பத்தில், புதியது/புதுப்பித்தல் என குறிப்பிடவேண்டும்.
6. தயை கூர்ந்து, உங்களின் அனைத்து கடிதங்களிலும், உங்களின் சான்று/உரிமம் எண் குறிப்பிடப்படவேண்டும்.
7. தயை கூர்ந்து, உங்களின் உரிமம்/சான்றிதழ் புதுப்பிக்க கோரும் விண்ணப்பம் மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## 8.0 தொலைபேசி எண்கள்

1. தலைவர் – 044 – 22500036
2. செயலர் – 044 – 22500291, 044 – 22500494
3. துணை செயலர் – 044 – 22500291

# 4. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

## முன்னுரை

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான பொதுத் துறை நிறுவனமாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஒரு வங்கி சாரா நிதி நிறுவனமாக (வைப்பீடு) 1991 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், ஒரு பொது நிதி நிறுவனமாக நிறுவனங்கள் சட்டப் பிரிவு 4Aன் கீழ் அறிவிக்கப்பட்டு இந்த நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ.5000 கோடி மற்றும் ரூ.2930 கோடியாகும். இந் நிறுவனம் பொது மக்கள் மற்றும் கடன் சந்தையில் வைப்பீடுகள் மூலம் நிதி திரட்டி வருகிறது. இந் நிறுவனம் கடன் சொத்துக்களாக ரூ.36,161 கோடியை 31.12.2019 தேதிப்படி பெற்றிருக்கிறது. இந் நிறுவனம் அதன் நிறை நலமான மற்றும் தொழில் முறை மேலாண்மையின் காரணமாக 2019–2020 ஆம் நிதியாண்டின் (31.12.2019 வரை) நிகர இலாபமாக ரூ.224.76 கோடியை ஈட்டியுள்ளது.

**நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகள்**

**காலவரை வைப்புத்திட்டம் :**

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தொடர்ந்து வைப்பீட்டாளர்களுக்கு வழங்கும் வட்டி விகிதத்தாலும் மற்றும் அவர்களின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளாலும் வைப்பீட்டாளர்களை கவர்ந்து வருகிறது. இந் நிறுவனம் வழங்கும் வட்டி விகிதமானது பொதுத்துறை வங்கிகள் வழங்கும் வட்டி விகிதத்தினை விட சராசரியாக 100 அடிப்படைப் புள்ளிகள் அதிகமாகும். இதன் விளைவாக, வைப்பீடுகளில் நிலையான வளர்ச்சியை 2019–2020ஆம் நிதியாண்டில் அடைந்துள்ளது. இந் நிறுவனம், 1.4.2019 முதல் 31.12.2019 வரை நிகர வைப்பீடாக ரூ.1,126.82 கோடியை திரட்டியுள்ளது. 1.4.2019 முதல் 31.12.2019 வரை இந்த நிதியாண்டில், நிகர வைப்பீடுகளின் வளர்ச்சி விகிதம் 4.12 விழுக்காடும், வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 9,93,108 லிருந்து 10,03,042 ஆகவும் வளர்ச்சியடைந்துள்ளது. 2018–2019 நிதி ஆண்டின் தொடக்கத்தில் பொது மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிகர வைப்பீட்டுத் தொகை ரூ.27,327.36 கோடியிலிருந்து 2019–2020 நிதி ஆண்டில் (31.12.2019 வரை) ரூ.28,454.18 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகையானது, பொது மக்கள், நிறுவனங்கள் மற்றும் மாநில அரசின் கீழ்வரும் வைப்பீட்டு திட்டங்கள் மூலம் திரட்டப்பட்ட வைப்பீட்டுத் தொகையை உள்ளடக்கியதாகும். மொத்த வைப்பீட்டு தொகையான ரூ.28,454.18 கோடியில் தனி நபர் முதலீட்டாளர்களின் பங்களிப்பு ரூ.6,063.70 கோடியாகும். மீதமுள்ள தொகையான ரூ.22,390.48 கோடி

நிறுவனங்களின் வைப்பீட்டாளர்கள் மற்றும் மாநில அரசின் கீழ்வரும் வைப்பீட்டு திட்டங்கள் மூலம் கிடைத்த பங்களிப்பாகும்.

**வட்டி விகிதம்**

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் செலுத்தப்படும் வைப்பீடுகளுக்கு பின்வரும் போட்டி வட்டிவிகிதம் வழங்கப்படுகிறது.

| மூத்த குடிமக்கள் (58 வயதிற்கு மேல்) | | பொது | |
|---|---|---|---|
| காலம் (மாதங்கள்) | வட்டி விகிதம் (ஒரு ஆண்டிற்கு வட்டி விகிதம்) | காலம் (மாதங்கள்) | வட்டி விகிதம் (ஒரு ஆண்டிற்கு வட்டி விகிதம்) |
| 12 மாதங்கள் | 7.75 | 12 மாதங்கள் | 7.50 |
| 24 மாதங்கள் | 8.00 | 25 மாதங்கள் | 7.75 |
| 36, 48 & 60 மாதங்கள் | 8.75 | 36, 48 & 60 மாதங்கள் | 8.25 |

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிதியுதவி**

இந்த நிறுவனம் திரட்டும் நிதியை, முதன்மையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு மட்டும் கடனாக வழங்கி வருகிறது. இந்த நிறுவனம் தொடங்கிய நாள் முதல், மொத்தம் ரூ.1,23,565.39 கோடியை தவணைக் கொள்முதல், குத்தகைக் கடன் மற்றும் குறித்த கால நிதியுதவியாக அளித்துள்ளது. இந்த நிறுவனம், 2019–2020 (31.12.2019 வரை) ஆம் ஆண்டில் மட்டும், அதிகபட்ச நிதியுதவியாக தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ரூ.20,047 கோடி வழங்கியுள்ளது ஒரு பெரிய சாதனையாகும். 31.12.2019 நிலவரப்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிகர நிதியுதவியாக ரூ.36,161.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**நிதி செயலாக்கம்**

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. **2019–2020**ஆம் நிதியாண்டின் **(31.12.2019** வரை) மொத்த வருவாய் ரூ.**2,518.91** கோடியாகும் (தற்காலிகமாக). இந்த நிறுவனம், **2019–2020** ஆம் ஆண்டில் **(31.12.2019** வரை) நிகர லாபமாக ரூ.**224.76** கோடி ஈட்டியுள்ளது. **1995–1996–**ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் தொடர்ந்து அரசுக்கு ஈவுத் தொகை வழங்கி வருகிறது.

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன அலுவலர்களின் தொடர்பு தொலைபேசி எண்கள்**

| வ.எண் | பதவியின் பெயர் | தொலைபேசி எண்கள் |
|---|---|---|
| 1) | தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் | 044-24363460 |
| 2) | பொது மேலாளர் | 044-24329924 |
| 3) | தொலை தொடர்பு எண்கள் | 044-24329945/46/50 |
| 4) | மின்அஞ்சல் | powerfin@md3.vsnl.net.in<br>tnpowerfinance@gmail.com |